
மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 நவம்பர் 1-15 தொகுதி 25 இதழ் 7

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200



வீரத்துடன் ஓய்வெடுங்கள் தோழர் சம்பு ஜி அவர்களே!



அக்டோபர் ௩0, 2026 இரவு இகக(மாலெ)விடுதலை கட்சித் தோழர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் இரவாகத்தான் இருந்தது. தோழர் ஸ்வதேஷ் அவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்து வந்தாலும், அவரை மருத்துவமனையில் இருந்து அக்டோபர் 29 அன்று பாட்னா அலுவலகத்திற்கு அழைத்து வந்திருந்த நிலையில், உடல் நிலை மோசமாகி மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற நிலையில், இந்தக் கட்சியை, இகக(மாலெ)விடுதலையை கட்டி எழுப்பிய முப்பெரும் தலைவர்களில் எஞ்சியிருந்த, நம்மை வழிநடத்திக் கொண்டிருந்த தோழர் ஸ்வதேஷ் அவர்கள் அக்டோபர் ௩0 அன்று நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். 1974 ஜூலை 28ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலையின் மத்திய கமிட்டி மூன்று தோழர்களால் மறு கட்டமைப்பு செய்யப்பட்டது. அதில் ஒருவர் தோழர் ஸ்வதேஷ் (சம்பு ஜி). மற்ற இரண்டு தோழர்கள் கட்சியின் மறைந்த முன்னாள் பொதுச் செயலாளர்களான தோழர் ஜாகர் (சுப்ரதா தத்) மற்றும் தோழர் வினோத் மிஸ்ரா. கடந்த ஐம்பது ஆண்டுகளாக கட்சியின் முன்னோக்கிய பயணத்தில் மிக முக்கிய வழிகாட்டியாக இருந்து வந்தார். அவருக்கு வயது 84. ஒரு கம்யூனிஸ்ட் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். கட்சிக் கடப்பாடு, தோழமையுணர்வு, எளிமை ஆகியவற்றிற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டிய புரட்சியாளர். ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம், மனித உரிமைகளுக்காக தனது இறுதி மூச்சுவரை போராடிய புரட்சியாளர் தோழர் ஸ்வதேஷ் அவர்கள். தோழரின் இறுதி ஊர்வலம் மற்றும் அடக்க நிகழ்ச்சி 2.11.2026 அன்று பாட்னாவில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் இகக(மாலெ) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், கார்திக் பால், வீ.சங்கர் உள்ளிட்ட அரசியல் தலைமைக் குழு உறுப்பினர், கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாராம் சிங், சுதாமா பிரசாத், தோழர் ஸ்வதேஷின் துணைவியார் தோழர் மீரா உட்பட பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். தோழர் ஸ்வதேஷ் அவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, தோழமை, கடப்பாடு, எளிமை அனைத்தையும் முன்மாதிரியாகக் கொண்டு அவரின் லட்சியத்தை அடைந்திட நாம் ஒவ்வொருவரும் உறுதியேற்போம்.



தோழர் ஸ்வதேஷ் அவர்களுக்கு செவ்வணக்கம்!



(தோழர்கள் சம்பு ஜி - மீரா)

போராட்டம்; அர்ப்பணிப்பின் ஓர் அழகான சித்திரம்!

தோழர் ஸ்வதேஷ் (சம்பு ஜி) மற்றும் தோழர் மீரா ஆகியோரின் இந்தப் புகைப்படம், ஒரு கூட்டு வாழ்க்கை, சித்தாந்த உறுதிப்பாடு, மக்கள் போராட்டங்களுக்கான அர்ப்பணிப்பை நமக்கு நினைவூட்டுகிறது. மக்களது உரிமைகளுக்காகவும் சமூக நீதிக்காகவும் மாற்றத்திற்கான கனவிற்காகவும் போராடிய ஓர் வாழ்க்கை.

மாலை தீப்பொறி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் குழுவின்
அரசியல் ஏடு

இருவார இதழ்
2026 நவம்பர் 1-15
தொகுதி 25 இதழ் 7

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர், சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

தனியார் வெற்றிக் கழகம்?!

இந்தியா கூட்டணியில் நாங்களும் இருக்கிறோம், வாக்களர் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை எதிர்க்கிறோம் என்று சொல்லி தமிழ்நாட்டில் கடந்த அக்டோபர் 15 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தவெக அமைச்சர் ஒருவர் கலந்து கொண்டார். ஆனால், நவம்பர் 1 அன்று 'வாக்குரிமையைப் பாதுகாப்போம், ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்' டெல்லி ராம் லீலா பேரணியில் தவெக சார்பாக யாரும் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் ஆர்எஸ்எஸ் 128 இடங்களில் பேரணி நடத்துவதற்கு தவெக அரசு அனுமதித்துள்ளது. உயர்நீதிமன்ற உத்தரவு என்று காரணம் சொல்வார்கள். ஆனால், உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் போது, ஆர்எஸ்எஸ் பேரணியால் வருங்காலத்தில் ஏற்படப் போகும் ஆபத்துகளையும் கலவரங்களையும் பற்றிய வலுவான காரணங்களை எடுத்துரைத்து அரசு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆஸ்தான ஜோசியருக்கு அரசாங்கப்பதவி, தூய்மைப்பணிக்கு தனியார்க்கு டெண்டர், கம்யூனிஸ்ட்டுகள் கணக்கெடுப்பு, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுப்பாடு என ஒவ்வொரு உத்தரவாகப் போட்டு, அதற்கு எதிர்ப்பு வந்தவுடன் திரும்பப் பெற்றுக் கொண்டிருந்த, ஜோசப் விஜய் அரசு தற்போது, தன் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த அரசு ஊழியர், ஆசிரியர், இளைஞர், மாணவர்களின் வருங்காலம் கேள்விக்குறியாகும் வகையில் அசராமல் அரசாணைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு எதிரான குரல்களை ஒடுக்குவதற்கும் தயாராகிக் கொண்டிருக்கிறது. மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தல்களுக்குப் பின்னர், தவெக அரசின் அக்கறையற்ற அலட்சியப் போக்கும் அதிகரித்து வருகிறது.

'டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு பத்து ரூபாய்' என்று பாட்டு பாடி ஓட்டு வாங்கினார் விஜய். அவரின் அமைச்சர் அதையே மீண்டும் அமல்படுத்திவிட்டு, விலை உயர்த்தவில்லை, எம்ஆர்பி உயர்ந்துள்ளது என்று புது விளக்கமளிக்கிறார்! டாஸ்மாக் ஊழியர்கள் போராடினால், சஸ்பென்ஸன், சட்டம் பாயும் என்று மிரட்டுகிறார். டாஸ்மாக்கை தனியாரிடம் கொடுக்கும் திட்டத்தைக் கைவிடவில்லை என்கிறார். ஆண்டுக்கணக்கில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கு போதுமான சம்பள உயர்வு, பணிநிரந்தரம் கிடையாது. ஆனால், எதிர்பாராமல் எம்எல்ஏ ஆனவர்களுக்கு லட்சக்கணக்கில் சம்பளம், சலுகைகள்.

சென்னை விமான நிலையத்தை தனியாரிடம் கொடுக்க இரகசியக் கடிதம் எழுதிய விஜய், இப்போது வெளிப்படையாகவே, அரசாங்கப் பணிகளையெல்லாம் அயலகபணி (அவுட் சோர்ஸ்) க்கு ஒப்படைப்பதற்கு ஆணை பிறப்பித்துள்ளார். அரசாங்க வேலைகளை தனியாரிடம் ஒப்படைக்க, தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமான கடல்கடந்த உழைப்பு சக்தி கழகம் (ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்) முகவர் வேலை பார்க்கப் போகிறது. இனி நிரந்தர அரசாங்க வேலை, பணிப்பாதுகாப்பு, ஓய்வூதியம், அரசாங்க வேலைக்கு ஆளெடுக்க டிஎன்பிஎஸ்சி எதுவும் இருக்காது. 12 மாநகராட்சிகளில் தூய்மைப் பணியை தனியாரிடம் ஒப்படைக்க மீண்டும் டெண்டர் விடப்பட்டுள்ளது. அதில் சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுத்தல் பணி ஒப்பந்தப் புள்ளி அழைப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாநகராட்சியில் காசு வாங்கிக் கொண்டு தொழிலாளர் கூலியையும் சுரண்டிக் கொழுக்கப் போகிற ஒப்பந்ததாருக்குப் பெயர் சேவை வழங்குநராம். மின்சாரக் கட்டணம் கண்டபடி எகிறுகிறது. மின் வெட்டு அதோடு போட்டி போடுகிறது. மின்சாரத்தை ஒரு யுனிட் ரூ.35க்கும் மேல் கொடுத்து தனியாரிடம் வாங்கப் போகிறது தவெக அரசு.

அரிசி, பருப்பு, பால், சர்க்கரை, எண்ணெய், வெங்காயம் என அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் விண்ணை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது. அவை பற்றிய எந்தவொரு கவலையும் இல்லாமல், போகுமிடமெல்லாம் 'சாலை உலா' நடத்திக் கொண்டிருக்கிறார் விஜய்.

தொடர்ச்சி 9 ம் பக்கம்...

விரக்தியடைந்த அரசாங்கத்தின் 'ஆட்சி மாற்ற'ப் பரப்புரையால் மக்களின் 'எதிர்ப்புணர்வை' நசுக்க முடியாது!

இந்திய தேர்தல் ஆணையம் (இசிஐ), வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் வெளியிட்ட திடுக்கிடும் உண்மைகளாலும் அதனைத் தொடர்ந்து தீவிரமடைந்துள்ள பரந்த மக்கள் போராட்டங்களாலும் மோடி அரசாங்கம் நிலைகுலைந்து போயுள்ளது. ஞானேஷ் குமார் உடனடியாகப் பதவி விலக வேண்டும்; எஸ்ஐஆர் ரத்து செய்யப்பட வேண்டும்; ஆளும் அரசாங்கத்திற்கு தங்களின் சொந்த விருப்பத்திற்கேற்ப தேர்தல் ஆணையக் குழுவைத் தேர்ந்தெடுக்கும் தடையற்ற அதிகாரத்தைத் வழங்குகிற, தேர்தல் ஆணையர்களுக்கு சட்டரீதியாக பொறுப்பேற்பதிலிருந்து வாழ்நாள் முழுவதற்கும் விலக்கு அளிக்கிற 2023-ஆம் ஆண்டு சட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று இந்தப் போராட்டங்கள் கோருகின்றன. எனவே, தேர்தல் மோசடி, பெரும் எண்ணிக்கையிலான மக்களின் வாக்குரிமைப் பறிப்புக்கு எதிரான இந்தப் போராட்ட இயக்கத்தின் மீது மோடி அரசாங்கம் முழுமையான போரைத் தொடுத்துள்ளது.

ஜனநாயகத்தின் மீதான இப்போரின் மிகவும் அப்பட்டமான அம்சம் நிச்சயமாக, அடக்குமுறைதான். 'வாக்குத் திருட்டுக்கு' எதிராக நடக்கும் போராட்டங்களைத் தடுப்பதற்காக மோடி அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்டுள்ள இத்தகைய அடக்குமுறையை, இந்திய மக்கள் மீது காலனித்துவ ஆட்சியாளர்கள் காட்டிய இகழ்ச்சியுடன் மட்டுமே ஒப்பிட முடியும். பல்லாயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினரைக் குவித்தது, ரயில்களை ரத்து செய்தது, மெட்ரோ நிலையங்களை மூடியது, டெல்லியின் புகழ்பெற்ற போராட்டக் களத்தின் (ஜந்தர் மந்தர்) அனுமதியை ரத்து செய்தது, சமூகச் செயல்பாட்டாளர்களையும் போராட்டச் செய்திகளைச் சேகரிக்கும் பத்திரிகையாளர்களையும் கூட வன்முறையாகத் தடுப்புக் காவலில் வைத்தது, கடத்தியது, பெண் போராட்டக்காரர்கள் மீது பாலியல் துன்புறுத்தல்களைப் பரவலாக நிகழ்த்தியது, 'அனுமதி ரத்து செய்யப்பட்ட' ஒரு இடத்தில் மூவர்ணக் கொடியை பறக்கச் செய்ததற்காகச் செயல்பாட்டாளர்களைக் கைது செய்தது வரை – ஓர் அமைதிவழிப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக மட்டுமே கொடூரமான முறையில் இத்தகையதொரு பிரம்மாண்டமான அடக்குமுறை இயந்திரத்தைப் பயன்படுத்துவது, சங்கிகளின் குறிப்பேட்டிலுள்ள ஏனைய உத்திகளைப் போலவே, காலனித்துவ ஆட்சி நிர்வாக மாதிரியிலிருந்து ஊக்கம் பெற்றதென தெளிவாகிறது.

வீட்டுக் காவல், தடுப்புக் காவல், செயல்பாட்டாளர்களை 'சமாதானப் பத்திரத்தில்' கட்டாயப்படுத்தி கையெழுத்திட முயற்சித்தல், பின்னர் அவர்கள் போராடும் உரிமையைத் விருப்பத்துடன் கைவிட்டதாகக் கூறிக் கொள்வது, போராட்டக்காரர்களைத் தாக்கும்போது காவல்துறையினர் தங்கள் அடையாளங்களை மறைத்துக்கொள்வது, போராட்டக்காரர்களைத் தாக்குவதற்காகக் காவல்துறை சீருடையிலோ அல்லது சாதாரண உடைகளிலோ குண்டர்களைத் திட்டமிட்டு களமிறக்குவது போன்ற பல்வேறு கொடூரமான காவல்துறை உத்திகள், அரசு ஒடுக்குமுறையும் பாசிசப் பயங்கரவாதமும் தீவிரமாகி வருவதன் புதிய மட்டத்தையே காட்டுகின்றன. இந்த அடக்குமுறை உத்திகளுக்கு அக்கம்பக்கமாக, போராட்ட இயக்கத்தின் மீதான மதிப்பைக் கெடுக்கவும் அதனைச் சட்டபூர்வமற்றதாக்கவும் தாக்கும்தன்மை வாய்ந்த ஒரு மாபெரும் விஷமப் பரப்புரையை சங்-பாஜக அமைப்பு கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இந்தப் பரப்புரைப் போரின் இரு முக்கிய சொற்கள் 'அராஜகம்', 'ஆட்சி மாற்றம்' என்பனவாகும்.

இப்போராட்ட இயக்கத்திற்கு எதிராக வைக்கப்படும் 'அராஜகம்' என்ற குற்றச்சாட்டை விட நகைமுரணானதாக வேறெதுவும் இருக்க முடியாது. ரயில்கள் ரத்து செய்யப்பட்டதாலும், மெட்ரோ நிலையங்கள் மூடப்பட்டதாலும் டெல்லியிலும் அதற்கு அப்பாலும் மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த குழப்பங்களுக்கும் பெருமளவிலான சிரமங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் காரணம், அமைதிவழிப் போராட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள்தான். உண்மையில், இந்தியா கூட்டணி அழைப்பு விடுத்த பேரணியை அரசாங்கம் அனுமதித்த அந்த நாளில், கணிசமான அளவில் போராட்டக்காரர்கள் மத்திய டெல்லியில் திரண்டிருந்த போதிலும் அங்கு எந்தவிதமான குழப்பமோ அல்லது இடையூறோ ஏற்படவில்லை. உலகின் எந்தப் பகுதியிலும் மாபெரும் மக்கள் போராட்டங்கள் என்பது ஜனநாயகத்தின் ஒரு வரையறுக்கும் அம்சமாகவே திகழ்கிறது. மோ-ஷா ஆட்சி வருவதற்கு முன்பு, டெல்லியிலேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட போராட்டங்கள், பேரணிகள், கூட்டங்கள் எந்தவொரு அராஜக இடையூறும் இல்லாமல் அடிக்கடி நடைபெற்றிருக்கின்றன.

இதற்கு மாறாக, இன்றோ, போராட்டங்கள் குறிப்பிட்ட ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்று மோடி அரசாங்கம் விரும்புகிறது; பின்னர் நாடாளுமன்றம் அல்லது பல்வேறு அமைச்சகங்களுக்கு அருகிலுள்ள இடங்களின் அனுமதியை ரத்து செய்கிறது. மேலும், மாநாடுகள், அமைதிவழிப் போராட்டக் கூட்டங்கள் மீது அனைத்து வகையான கட்டுப்பாடுகளையும் விதிக்கிறது. இருப்பினும், போராட்டத்திற்கான புதிய இடங்களைத் தேடவும் இருப்பிடங்களை மாற்றிக்கொள்ளவும்

நிர்பந்திக்கப்படும் போராட்டக்காரர்கள் அராஜகத்தைப் பரப்புவதாகக் குற்றம் சாட்டுகிறது. சில பாஜக தலைவர்களும் ஆர்எஸ்எஸ் கருத்தியலாளர்களும் தங்கள் அராஜகக் குற்றச்சாட்டை நியாயப்படுத்த அம்பேத்கரின் பெயரைத் துணைக்கழைக்கத் தொடங்கியுள்ளனர். மீண்டும் சொல்கிறோம், இது பெரும் நகைமுரண் ஆகும். அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குழப்பத்தையும் அராஜகத்தையும் தவிர்க்க வேண்டும் என்றும் அம்பேத்கர் வலியுறுத்திய அதே உரையில், ஜனநாயகம் சர்வாதிகாரமாகச் சீரழிந்துவிடும் ஆபத்து குறித்தும் எச்சரித்துள்ளார். அரசமைப்புச் சட்டம் (புதியவற்றை) ஏற்கும் திறனுடையதாக இருக்க வேண்டும் என்றும் நிறுவனங்கள் வரவிருக்கும் சந்ததியினரின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்த அவர் தாமஸ் ஜெபர்சனின் கூற்றை மேற்கோள் காட்டினார்.

“தங்களின் மக்கள் எதிர்ப்புணர்வைப் பேணிப் பாதுகாக்கிறார்கள் என்று அவ்வப்போது அதன் ஆட்சியாளர்கள் எச்சரிக்கப்படவில்லை எனில், எந்த நாட்டால் தன் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும்?” என்ற ஜெபர்சனின் புகழ்வாய்ந்த மேற்கோளைச் சுட்டிக்காட்டிய அம்பேத்கர், ஜெபர்சனின் கூற்று “வெறும் உண்மை மட்டுமல்ல, முழுமுற்றான உண்மையாகும்” என்று குறிப்பிட்டார். ஜனநாயகத்தின் மீதும் அரசமைப்பு நெறிமுறைகளின் மீதும் மட்டுமே அம்பேத்கரின் கவனக்குவிப்பு இருந்தது. ஆனால் இன்றோ, மோடி அரசாங்கத்தாலும் அது நேரடியாகத் தேர்வு செய்த தலைமைத் தேர்தல் ஆணையராலும் ஜனநாயகம் சிதைக்கப்படுவதற்கும் நிறுவன பொறுப்பேற்பு மீறப்படுவதற்கும் எதிராக மக்கள் அமைதிவழிப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கமோ, ‘அராஜகம்’ என்ற பூச்சாண்டியைக் காட்டி, அமைதிவழி அரசமைப்புச் சட்டப் போராட்டங்களை ஒடுக்குவதிலும் இகழ்வதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளது!

அரசாங்கம் பதற்றத்துடன் பயன்படுத்த முயலும் மற்றொரு பூச்சாண்டி ‘ஆட்சி மாற்றம்’ என்பதாகும். இறையாளுமை கொண்ட நாடுகளின் அரசாங்கங்களைக் கவிழ்த்து பொம்மை ஆட்சியாளர்களைப் பதவியில் அமர்த்துவதன் மூலம் தொடர்ச்சியான ‘ஆட்சி மாற்றங்களை’ அரங்கேற்றிய வெட்கக்கேடான அமெரிக்க வரலாற்றின் காரணமாக, இந்தச் சொல் வெளிநாட்டுச் சதி, ஏகாதிபத்தியத் தலையீடு என்ற வாடையை வீசுகிறது. ஈராக் போர் முதல் நடந்து கொண்டிருக்கும் ஈரான் போர் வரையிலும் வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவின் கடத்தல் முதல் கியூபாவுக்கு எதிரான தொடரும் ஆட்சி மாற்ற அச்சுறுத்தல்கள் வரையிலும் ஆட்சி மாற்ற சதித்திட்டங்களின் தொடர் வரலாறு தான் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையாகும். ஆனால், உலகெங்கிலும் அமெரிக்கா நிகழ்த்தும் ஆட்சி மாற்ற நடவடிக்கைகளை ஆதரிப்பதோடு, அமெரிக்க-இஸ்ரேலியக் கூட்டுக்குச் சேவை செய்வதற்காக இந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தன்னாட்சியையும் தேசிய நலன்களையும் சாத்தியமுள்ள ஒவ்வொரு வழியிலும் அடகுவைக்கத் தயாராக உள்ள ஒரு அரசாங்கத்தை சீர்குலைக்க, இந்தியாவில் ஒரு ஆட்சி மாற்றத் திட்டத்தை எதற்காகத்தான் அமெரிக்கா தீட்டப்போகிறது?

இந்திய மக்களின் அனுபவங்கள், போராட்டங்களின் அடிப்படையில் இந்தியாவில் அரசாங்கத்தை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை இன்று வலுத்து வருகிறது. மோடி அரசாங்கத்துடனும் நாடு முழுவதும் உள்ள அதன் எண்ணற்ற ‘இரட்டை என்ஜின்’ பதிப்புகளுடனும் தாங்கள் பெற்ற கசப்பான அனுபவங்கள், அவற்றின் முழுமையான தோல்விகள், துரோகங்கள், சங்-பாஜக இயந்திரம் ஒவ்வொரு நாளும் பரப்பும் வெறுப்பு, பொய்கள், கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறை ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் தங்களின் சொந்த அனுபவத்தில் இருந்து எட்டியுள்ள மிகவும் தர்க்கரீதியான முடிவு இதுவாகும். இளைஞர்களின் தலைமையில் மக்கள் ஆட்சி மாற்றத்தைப் பற்றிப் பேசுவது இது முதல் முறையல்ல. ஆட்சி மாற்றத்திலிருந்து அமைப்புமுறை மாற்றம் வரை, மாற்றத்திற்கான கோரிக்கையே நவீன இந்திய ஜனநாயக அரசியலின் ஜீவநாடியாக இருந்துள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்தியாவின் மிகவும் புகழ்வாய்ந்த நாடு தழுவிய முழக்கமாக ‘இன்குலாப் ஜிந்தாபாத்’ (புரட்சி ஓங்குக) இருந்து வருகிறது. 1970-களின் நடுப்பகுதியில் ஜெயப்பிரகாஷ் நாராயண் விடுத்த ‘சம்பூர்ண கிராந்தி’ அல்லது முழுமையான புரட்சி என்ற முழக்கம் ஒரு பெரிய அரசியல் கொந்தளிப்பைத் தூண்டியது; அது நெருக்கடிநிலையின் தோல்விக்கும் இந்தியாவின் முதல் காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் மத்தியில் உருவாவதற்கும் வழிவகுத்தது.

மோடி அரசாங்கமும் சங்-பாஜக நிறுவனமும் ஆட்சி மாற்றப் பூச்சாண்டியை எழுப்பியும் வெளிநாட்டுச் சதி இருப்பதாகக் குறிப்பால் உணர்த்தியும் தேர்தல் மோசடிகளுக்கு எதிரான போராட்ட இயக்கத்திற்கு அவதூறு பரப்பவும் மக்களைத் திசைதிருப்பவும் முயற்சிக்கின்றன. இது மக்கள் மீதான அவர்களின் அடிப்படை அச்ச உணர்விலிருந்தும் மாற்றுக் கருத்துகளின் மீதான அவர்களின் வெறுப்பிலிருந்தும் எழுகிறது. அதனால்தான், ஊதிய உயர்வு அல்லது காலநிலை நீதி பற்றிப் பேசும் செயற்பாட்டாளர்களைக் கூட அடையாளம் கண்டு, ‘தேசியப் பாதுகாப்புக்கு’ அச்சுறுத்தலாகக் கூறி கைது செய்கிறார்கள். ஆனால் பாஜகவின் ஒடுக்குமுறை உத்தியைப் போலவே அதன் ‘கருத்துப்போரும்’ இந்த முறை தோல்வியடைந்து வருகிறது. வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் நியாயமான தேர்தல்களுக்காகவும் பொறுப்புடன் பதிலளிக்கக்கூடிய அரசாங்கத்திற்காகவும் பொறுப்புக்கூறக்கூடிய நிறுவனங்களுக்காகவும் மக்கள் போராடுவதிலிருந்து எந்தவொரு அராஜகக் குற்றச்சாட்டோ அல்லது வெளிநாட்டுச்சதிப் பூச்சாண்டியோ அவர்களைத் தடுத்துவிட முடியாது. ❑

தலையங்கம், லிபரேஷன், நவம்பர் 2026
தமிழாக்கம்: விஜி

தமிழ்நாட்டில் விஜயின் வருகை

பி.சிவராமன்

தமிழ்நாட்டில் 60 ஆண்டுகளாக இருந்துவந்த இரண்டு திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளை முடிவுக்குக் கொண்டுவந்தார் விஜய். இரு கட்சிகளுக்கும் மாற்றாக நடிகர் விஜயகாந்தின் தேமுதிகவும் பாஜகவும்கூட எடுத்த மூன்றாவது அணி முயற்சிகள் தோல்வியடைந்த தமிழ்நாட்டில் ஒரு வெற்றிகரமான மூன்றாவது சக்தியாக விஜய் உருவெடுத்தார். விஜய் தனது சினிமாப் புகழினால் மட்டுமே இதைச் சாதிக்கவில்லை. இரண்டு திராவிடக் கட்சிகளிடம் மிகவும் அந்நியப்பட்டு, மூன்றாவதாக ஒரு மாற்றத்தை விரும்பிய தமிழ்நாட்டின் பெண்கள் மற்றும் இளம் வாக்காளர்களின் ஆதரவும் வலுவாக இருந்தது,

விஜய் அரசு கடந்த ஐந்து மாதங்களாக ஆட்சியில் உள்ளது. இந்த ஐந்து மாதங்களில் அவர் மாநிலத்திற்கான தனது முழுமையான வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலை வெளியிடவில்லை. தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தை அழுத்திக் கொண்டிருக்கும் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள) பல பிரச்சினைகளுக்கு எந்தவொரு புதுமையான தீர்வுடனும் வரவில்லை. மாறாக, பெரும்பான்மையானோரால் விமர்ச்சிக்கப்படும் அற்பமான கவர்ச்சித் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்.

பெண்களின் ஆதரவை முழுமையாக உணர்ந்து கொண்டு, பெண்களை இலக்காகக் கொண்ட சில திட்டங்கள் மூலம் பெண் "வாக்கு வங்கியை" ஒருங்கிணைக்க முயன்றார். ஒன்று, தாய்மாரை மகிழ்விக்கும் வகையில், பிறந்த குழந்தைகளுக்கு 1 கிராம் இலவச தங்க மோதிரத் திட்டம். இரண்டாவது, அண்ணன் சீர், ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சம் அல்லது அதற்கு குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மணமகள்களுக்கு இலவசமாக 1 பவுன் தங்கம். இவை நிலப்பிரபுத்துவக் காலத்திய படுபிற்போக்கான ஒன்று. மிக முக்கியமாக, அரசு பேருந்துகளில் பெண்கள் மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்ய "வெற்றி பயணம் திட்டம்" விஜயால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஒரு புதுமையான, அரசியல் ஆதாயம் தரும் கவர்ச்சித் திட்டம். ஆனால், விஜய் அரசு, பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவுமில்லை, அதோடு அதிக பெண்கள் பயணம் செய்யும் வகையில் புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்தவுமில்லை. இதனால் பேருந்துகளில் அதிக நெரிசலை ஏற்படுத்துகிறது.

அரசியல் ரீதியாக, விஜய் இந்தியா கூட்டணியில் இணைந்துள்ளார், அதன் மூலம் தமிழகத்தில் பரவலாக உள்ள பாரதிய ஜனதா எதிர்ப்புணர்வுடன் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டுள்ளார், பாஜக எதிர்ப்புணர்வை முக்கிய எதிரியான திமுக ஏகபோகமாக்கிட அவர் விரும்பவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, தனது அரசாங்கம் 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டை 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் என விஜய் வாக்குறுதியளித்துள்ளார். அதன் பொருள் என்ன என்பதை நாம் ஆராயலாம்..

10 ஆண்டுகளில் தமிழ்நாடு 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற முடியுமா?

இப்போது தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் அளவு ரூ.35.29 லட்சம் கோடியாகும். பத்து ஆண்டுகளில், இதை ஆண்டுக்கு 5% பணவீக்கம் என வைத்துக் கொண்டாலும், ரூ.172.56 லட்சம் கோடியாக விஜய் உயர்த்த வேண்டும். இது 4.9 மடங்கு அதிகரிப்பாகும். இது தமிழ்நாட்டு பொருளாதாரத்திற்கு ஆண்டுக்கு 17.2% பெயரளவு வளர்ச்சி விகிதம் அல்லது பணவீக்கத்தைச் சரிசெய்த பிறகு ஆண்டுக்கு 12.2% உண்மையான வளர்ச்சி விகிதத்தைக் கோருகிறது. சமீபத்திய ஆண்டுகளில் தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் பெயரளவு வளர்ச்சி விகிதங்கள் : 2025-26 – 10.83%, 2024-25 – 11.19%, 2023-24 – 13.34%, 2022-23 – 14.47%, 2021-22 – 15.91%

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்த ஒரு நிதியாண்டிலும் பெயரளவு வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 17%-ஐத் தொட்டதில்லை. தமிழகத்தில் பெயரளவு வளர்ச்சி விகிதம் 17%-ஐத் தொடவேண்டுமானால், என்னென்ன சவால்கள் உள்ளன? தமிழ்நாட்டுப் பொருளாதாரம் எதிர்கொள்ளும் சவால்களை ஒவ்வொன்றாகப் பார்க்குமுன், தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் சாதக பக்கங்களையும், பலங்களையும் காணலாம்.

தமிழகப் பொருளாதாரத்தின் பலங்கள்

இந்தியாவில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளாதாரமாகும். இருப்பினும், தமிழக விவசாயம் கவலைக்குரியதாகவே இருந்தது. 2023-24 இல் -1.96% மற்றும் 2024-25 இல் -1.82% என்கிற எதிர்மறை வளர்ச்சிக்குப் பிறகு, தமிழ்நாடு விவசாய வளர்ச்சி 2025-26 இல் 9% வளர்ச்சியைப் பதிவு செய்து மீண்டெழுந்தது.

தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் (நடப்பு விலைகளில்) இப்போது ரூ.4.08 லட்சமாகும், இது ரூ.4.33 லட்சம் தனிநபர் வருமானம் கொண்ட கர்நாடகத்திற்கு அடுத்தபடியாகத்தான் உள்ளது.

தமிழ்நாடு பன்முக தொழிற்துறை பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு நன்கு வளர்ச்சியடைந்த ஆட்டோமொபைல் (தானியங்கி வாகன) துறையைக் கொண்டுள்ளது. இந்தத் துறையில் தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடு பாய்ந்து வருகிறது. 1998 ஆம் ஆண்டில் ஃபோர்டு மோட்டார்ஸ் முதலீட்டிற்குப் பிறகு, தமிழ்நாட்டிற்கு ஹூண்டாய், நிசான், ரெனோ மற்றும் பிஎம்டபிள்யூ ஆகியவற்றின் முதலீடுகள் வந்தன, இதனால் தமிழ்நாடு ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாடு வளர்ந்த போக்குவரத்து உள்கட்டமைப்பையும் 7000 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகளையும், 1076 கி.மீ நீளமுள்ள இரண்டாவது நீளமான கடற்கரையையும்

சென்னை, தூத்துக்குடி என இரண்டு முக்கிய துறைமுகங்களையும் கொண்டுள்ளது .

சமூக ரீதியாகவும் தமிழ்நாடு ஒப்பீட்டளவில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு 80% மாணவர்கள் பள்ளிக் கல்வியை முடிக்கின்றனர். கிட்டத்தட்ட 50% மாணவர்கள் கல்லூரிக்குச் செல்கின்றனர்.

இந்தியாவின் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களில் 40%க்கும் அதிகமானோர் தமிழ்நாட்டில் உள்ளனர். ஆனால், இங்கு ஒரே விதமான வேலைக்கு ஆண்களைவிட பெண்கள் குறைவான கூலியே பெறுகிறார்கள். இது தற்காலிகத் தொழிலாளர் மத்தியில் கூர்மையானது – கிராமப்புறத்தில் ஆண் தற்காலிக தொழிலாளி 2003 இல் ஒரு நாளைக்கு சராசரியாக ரூ.437 வாங்கினார். அதே நேரத்தில் கிராமப்புற பெண் தொழிலாளி ரூ.259 தான் சம்பாதிக்கிறார். நகர்ப்புறங்களில், ஆண்கள் ஒரு நாளைக்கு சராசரியாக ரூ.488ம், பெண்கள் ஒரு நாளைக்கு ரூ.325ம் பெறுகிறார்கள். வழக்கமான வேலைகளில் ஒரு ஆண் 1 ரூபாய் ஊதியம் பெறும் அதே வேளை பெண் 75 பைசாதான் பெறுகிறார் என 1.7.2023 தேதிய தி இந்துவில் வந்த அறிக்கை கூறுகிறது. (ஆண்களுக்கு சராசரியாக ரூ. 17,476 என்றால் பெண்களுக்கு ரூ.12,969தான்). மற்ற மாநிலங்களைவிட அதிகமாக தமிழ்நாட்டில் உழைப்புச் சக்தியில் பெண்களின் பங்கு 43%. ஆனால் இது சர்வதேச தரத்தைவிடக் குறைவானதாகும். அதுமட்டுமின்றி, அமைப்பாக்கப்பட்ட துறையில்கூட, பெண்களுக்கிடையே சாதியரீதியான ஊதிய வேறுபாடு தீவிரமாக உள்ளது. தலித் அல்லாத பெண்கள் ரூ.13,905 மாதச் சம்பளம் பெறும்போது தலித் பெண்கள் ரூ.8,446 தான் பெறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பன்முகத் தன்மை கொண்ட தொழில்கள் உள்ளன. ஜவுளி, ஆட்டோமொபைல் தொழில்கள் அதிகளவில் இருக்கும் அதே வேளை, எலக்ட்ரானிக்ஸ், விண்வெளி, பாதுகாப்பு, பொறியியல் தொழில்களும் உள்ளன. புதிய தொழில்களான செமிகண்டக்டர்கள், லைஃப் சயின்சஸ், தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க மற்றும் மின்சார வாகனம் போன்றவையும் கணிசமாக உள்ளன.

தமிழ்நாடு வளர்ச்சி விகித்தில் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த ஆண்டு 11% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. மொத்த எண்ணிக்கையில் 15% . தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகும், இதன் ஜிஎஸ்டிபி ரூ.35 லட்சம் கோடிக்கு சற்று கூடுதலாகும். 2025–26 நிதியாண்டில், தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஏறக்குறைய ரூ. 35.68 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு இந்தியாவின் ஜவுளியில் மூன்றில் ஒரு பங்கையும் மின்சார வாகனங்களில் சுமார் 40% ஐயும் உற்பத்தி செய்கிறது. தமிழ்நாட்டில் முதலீடு அதிகமாக உள்ளது. 2025 ஆம் ஆண்டில், தமிழ்நாடு ரூ.2 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீட்டை ஈர்த்துள்ளது.

புதிய தலைமுறைத் தொழில்களிலும் தமிழ்நாடு நுழைகிறது. ஒரு செயற்கை நுண்ணறிவுப் பூங்காவை அமைத்துள்ளது. நவீன எலக்ட்ரானிக்ஸில், ஃபாக்ஸ்கான் தமிழ்நாட்டில் 2 பில்லியன் டாலர் முதலீடு செய்துள்ளது. வல்லம் வடகால் விண்வெளிப் பூங்காவும், மணலூர் மற்றும் கிருஷ்ணகிரியில் மின்சார வாகனப் பூங்காக்களும் அமைக்கப்பட்டுள்ளன. டாடா பவர் சோலார், விக்ரம் சோலார் மற்றும் ஜிண்டால் ஸ்டீல் வொர்க்ஸ் குழுமம் (JSW) ஆகியவற்றின் மூலம் தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டைப் பெற்றுள்ளது. 10 தரவு மையங்கள், கப்பல் கட்டுதல், மேம்படுத்தப்பட்ட ஜவுளித் தொழிலும் உள்ளன. தமிழ்நாட்டின் கடன்–ஜிஎஸ்டிபி விகிதம் 23% ஆகும். ஆனாலும் இது நிலையானது.

ஒப்பீட்டளவில் வலுவான பொருளாதாரத்தைப் பெற்றிருந்தும், சாதக அம்சங்கள் இருந்தபோதும் அவற்றை எவ்வாறு மேலும் ஒருங்கிணைப்பது என்பது குறித்து விஜய்க்கு எந்தவொரு உறுதியான திட்டமும் இல்லை.

தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் எதிர்மறை அம்சங்கள்

விஜய் அரசாங்கம் பரந்தூர் புதிய சர்வதேச விமான நிலையத் திட்டத்தைக் கைவிட்டது முக்கியமான முடிவாகும். ஒரு பெரிய விமான நிலையத்தை மட்டும் வைத்துக் கொண்டு 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை சாதிக்க முடியுமா?

தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தில் ஒரு விசித்திரமான முரண்பாடு வெளிப்படுகிறது: ஒப்பீட்டளவில் வளர்ச்சி அதிகமாக இருக்கும் போது, மாநில வருவாய் குறைவாகவே உள்ளது. கடன் தொடர்ந்து உயர்ந்துள்ளது, அதிக வட்டிச் சுமையால், வளர்ச்சி சுருங்குகிறது. வருவாயைப் பெருக்க மான்டெக் சிங் அலுவாலியா தலைமையில் ஒரு குழுவை விஜய் அமைத்துள்ளார்.

சொந்த வருவாய் உருவாக்கம் 2006 இல் 10% இலிருந்து 2026 இல் 6.2% ஆகக் குறைந்துள்ளது. மாநிலத்தின் மொத்த வருவாயில், அதன் சொந்த மூலங்களிலிருந்து–மாநில வரிகள், கட்டணங்கள் மற்றும் பிற உள் வருமானம்–வரும் விகிதம் கடந்த 20 ஆண்டு காலத்தில் குறைந்துள்ளது. தனது நிதித் தேவைக்கு மாநிலத்தின் சொந்த வருவாயைவிட மத்திய அரசின் மானியம் மற்றும் கடன்களை நம்பிக்கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

நிதிக் கட்டுப்பாடுகளால் தமிழ்நாடு நலத் திட்டங்களுக்காக அதிகம் செலவிடுவதில்லை. 2026–2027 தமிழக பட்ஜெட்டின்படி நிதியாண்டு 2009 லிருந்து மாநிலத்தின் மூலதனச் செலவும் குறைந்துள்ளது. 2024–25 நிதியாண்டிற்கு, மூலதனச் செலவு ரூ.47,681 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதே ஆண்டிற்கான தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு சுமார் ரூ.31.55 லட்சம் கோடி என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த மூலதனச் செலவு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 1.5% ஆக இருக்கும். தமிழ்நாட்டின் வருவாய் செலவினமும் 2005ஆம் ஆண்டு முதல் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. அனைத்து சேவைகளுக்கான வருவாய் செலவினம் குறைந்துவிட்டது. வருவாய் செலவினத்தில் வளர்ச்சி மற்றும் வளர்ச்சி அல்லாத செலவினங்கள் இரண்டும் அடங்கும். சம்பளம், வட்டி கட்டுதல் போன்ற வளர்ச்சி அல்லாத செலவினங்கள் பெரும் பங்கை எடுத்துக்கொள்வதால் வளர்ச்சிக்கான செலவினங்கள் குறைகிறது.

மாநில பட்ஜெட்டில் பெரும்பகுதி மாநிலத்தின் மொத்த செலவினத்தில் 85% முதல் 90% வரை வருவாய் செலவினத்திற்குப் போகிறது. மூலதன முதலீட்டிற்கு மிகக் குறைந்த அளவே கிடைக்கிறது. உறுதியாகக் கொடுக்கப்பட

வேண்டிய பொறுப்புகளான வட்டிகள், அரசு ஊழியர் சம்பளம், ஓய்வூதியங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்கள்/மானியங்கள் போன்றவற்றை ஒருபோதும் குறைக்க முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தமிழ்நாட்டில் மூலதனச் செலவு மற்றும் வருவாய் செலவினத்தின் வளர்ச்சிக் கூறு இரண்டும் குறைந்துவிட்டன. வருவாய் செலவினத்தின் வளர்ச்சிக் கூறுகளில் சமூகத்திற்கான சேவைகளான கல்வி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம், நீர் வழங்கல், தூய்மைப் பணி, வீட்டுவசதி மற்றும் பல்வேறு தரப்பட்ட நலத் திட்டங்களும் விவசாயம், நீர்ப்பாசனம், கிராமப்புற வளர்ச்சி, தொழில் மற்றும் உள்கட்டமைப்பு தொடர்பான செயல்பாடுகளை உள்ளடக்கிய பொருளாதார சேவைகளும் அடங்கும். இந்த சேவைகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் இரண்டாவது முக்கிய பொருளாதாரத்தைக் கொண்ட தமிழ்நாடு வளர்ச்சியில் பெரும் முட்டுக்கட்டைகளை எதிர்கொள்கிறது என்பதைக் காட்டுகிறது.

மீண்டும் சுருக்கமாகக் கூறின், தமிழ்நாட்டில் பரந்த அளவில் நல்வாழ்வுக்கான செலவினங்கள் தேக்கமடைந்துள்ளன. பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம், மணமகள்களுக்கு 1 பவுன் தங்கம், பட்டுப் புடவை ஆகியவற்றை வழங்குவதால் இதை ஈடுசெய்ய முடியாது.

சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறைக்கான ஒதுக்கீடுகள் (நடப்பு ஆண்டு மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகள்)

2026-27 -- ரூ.40,000 கோடி

2025-26 -- ரூ.39,000 கோடி

2024-25 -- ரூ.38,096 கோடி

கடந்த மூன்று பட்ஜெட்டுகளில் மொத்த பட்ஜெட் செலவு

2026-27 -- ரூ. 4,72,585 கோடி

2025-26 -- ரூ. 4,39,293 கோடி

2024-25 -- ரூ. 4,12,504 கோடி

தொடர்புடைய ஆண்டின் மொத்த பட்ஜெட் செலவில் தமிழ்நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறையின் சதவீதம்

2026-27 -- 8.46%

2025-26 -- 8.88%

2024-25 -- 9.24%

ஆதாரம்: பல்வேறு ஆண்டுகளுக்கான தமிழ்நாடு பட்ஜெட்டுகளிலிருந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள்.

மேலே உள்ள புள்ளிவிவரங்களிலிருந்து, சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறைக்கான ஓராண்டிற்கான அதிகரிப்பு சுமார் ரூ.1000 கோடி அல்லது அதற்கும் குறைவாக இருக்கும் போது, ஒட்டுமொத்த செலவினத்தில் இதற்கான ஒதுக்கீட்டின் சதவீதம் சீராகக் குறைந்து வருவதைக் காணலாம்.

சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறைக்கான ஒதுக்கீட்டினுள்தான் மூத்த குடிமக்கள் நலன், குடும்பத் தலைவி நிதியுதவி, பெண்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் உதவித்தொகை போன்ற பெண்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டங்கள், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி மற்றும் பாதுகாப்புக்கான திட்டங்கள், கைம்பெண், மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய பெண்களுக்கான பல்வேறு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு கல்விக்கான பங்களிப்புகள், உதவித்தொகை மற்றும் பள்ளி ஆதரவுத் திட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான திட்டங்கள் மற்றும் அன்னபூர்ணா யோஜனா போன்ற சிறப்பு நலத் திட்டங்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் உள்ளிட்ட இதர பெண்களை இலக்காகக் கொண்ட நலத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்தும் வருகின்றன. விஜயின் அண்ணன் சீர் திட்டத்திற்காக ரூ.812 கோடியும் இந்த ஒதுக்கீட்டினுள்தான் வரும். அப்படியென்றால் பெண் தொடர்பான மற்ற திட்டங்களுக்கு எவ்வளவு மீதமிருக்கும்? அவற்றின் கதி என்னவாகும்.?

தமிழகத்தில் ஒரு நிதி முரண்பாடு

தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது உயர்ந்த, வளர்ந்த பொருளாதாரமாக இருக்கலாம் முதலீடுகள் தாராளமாகப் பாயலாம். ஆனால், மற்றொரு விசித்திரமான முரண்பாடு உள்ளது. வேலைவாய்ப்பு நிலைகளும் வேலைவாய்ப்புகளின் தரமும் உயரவில்லை. இது தமிழ்நாட்டை, உலக மூலதனத்திற்கு அரை திறன் கொண்ட 'பயிற்சிப்பட்டறை' (Semi-Skilled 'Workshop') நிலைக்குத் தள்ளும்.

விஜய் தமிழ்நாடு பொருளாதாரம் குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் தீவிரமாக தீர்ப்பதைப் பற்றி பேசாமல், மு.க.ஸ்டாலினின் முந்தைய திமுக அரசில் குற்றம் கண்டுபிடிப்பதில் அதிக கவனம் செலுத்தியுள்ளது, விஜய் அரசின் முதல் பட்ஜெட் அது முன்பு வெளியிட்ட வெள்ளை அறிக்கையுடன் ஒத்துப்போகவில்லை. திருநெல்வேலியை தளமாகக் கொண்டு செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான 'உவகை ஆராய்ச்சி அறக்கட்டளை (Uvakai Research Foundation)' தமிழகத்தின் பொருளாதாரம் குறித்து ஒரு ஆராய்ச்சித் தாளை வெளியிட்டுள்ளது. அவர்கள் மேலே சொல்லப்பட்டுள்ள தமிழ்நாட்டுப் பொருளாதாரம் சந்திக்கும் அனைத்துப் பிரச்சினைகளைப் பற்றி விரிவாகப் பேசவில்லை.

அதிகமான வளர்ச்சி விகிதத்தை அடைவதற்கு தமிழ்நாடு என்ன செய்ய வேண்டும்?

அதிக வளர்ச்சிக்கு அதிக முதலீடு தேவை. 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடு வெளிநாட்டு முதலீட்டை (FDI) ஈர்ப்பதில் முதலிடத்தைப் பிடித்தது. ஏப்ரல்-ஜூன் 2026 இல் 5.95 பில்லியன் டாலர் வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தது. விஜய் அரசாங்கத்தின் முதல் 100 நாட்களுக்குள் தமிழ்நாடு மொத்தம் ரூ.71 லட்சம் கோடி முதலீட்டைப் பெற்றது. இதனால், மக்களிடையே மட்டுமல்ல, வணிகர்கள் மத்தியிலும் விஜய் பிரபலமானார்.

மே 2021 க்கும் மார்ச் 2025 க்கும் இடையில் உள்நாட்டு முதலீடு உட்பட மாநிலம் முழுவதும் உள்ள மொத்த உறுதியளிக்கப்பட்ட முதலீடுகள் தோராயமாக ரூ.10,14,368

கோடியை எட்டியது, இது 32.04 லட்சத்துக்கும் மேற்பட்ட வேலைகளை உருவாக்கும் என்று முந்தைய திமுக அரசாங்கத்தில் தொழில்துறை அமைச்சராக இருந்த டி.ஆர்.பி. ராஜாவால் கொண்டுவரப்பட்ட 2025–26 தொழில்கள், முதலீடு மற்றும் வர்த்தகத் துறைக்கான 178 பக்க கொள்கைக் குறிப்பு கூறுகிறது.

அட்டவணை வணிக வங்கிகள் மூலம் தமிழ்நாட்டின் தொழில்துறைக்கான மொத்தக் கடன் ரூ.2.5 லட்சம் கோடியிலிருந்து (2019–20) ரூ.3.01 லட்சம் கோடியாக (2023–2024) உயர்ந்தது. இவ்வாறாக நிதி மூலதனம் தமிழகத்தின் வளர்ச்சியில் துடிப்பான பங்கு வகிக்கிறது. கூடுதல் வேலைகளை உருவாக்கத் தேவையான அதிக நிதி முதலீட்டை ஈர்க்க தமிழ்நாடு கூடுதல் ஊக்கத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டும்.

தமிழ்நாடு திறமைமிக்க தொழிலாளர் சக்தியைக் கொண்ட மாநிலம் எனக் கூறப்படும்போது, சுயதிருப்தி அடைந்துவிடக் கூடாது. இந்த செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் யுகத்தில், திறமைகளும்கூட அதிவேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் காலத்திற்கு ஏற்றவாறு தொழிலாளர் திறமைகளை மேம்படுத்துவதற்கான பாரிய திட்டத்தை தமிழ்நாடு மேற்கொள்ள வேண்டும்.

ஒரு கடலோர மாநிலமான, தமிழ்நாடு காலநிலை மாற்றத்தால் எளிதில் பாதிக்கப்படக்கூடியது. இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்னணி இடத்தை தமிழ்நாடு ஏற்கனவே பெற்றுள்ளது. தொடர்ந்து பசுமைத் தொழிற்கூடங்களை கட்டிட வேண்டும், மேலும் நிலம், நீர் பயன்பாட்டு நிர்வாகத்தை நெறிமுறைப்படுத்திட வேண்டும்.

முந்தைய திமுக அரசாங்கம் 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. இப்போது, விஜய் 2036க்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த இலக்கை அடைய விஜய், திமுகவின் அதே முறைகளைத் தொட முடியாது. அவர் வளர்ச்சிக்காக இன்னும் புதுமையான வழிகளுடன் வர வேண்டும். புதிய வளர்ச்சிக்கான வழித்தடங்களைக் கண்டறிய வேண்டும்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக இருப்பதில் தமிழ்நாடு சுயதிருப்தி அடையக்கூடாது. மாறாக, அது தன்னை தூரக் கிழக்கு பொருளாதாரங்கள் அல்லது வரவிருக்கும் லத்தீன் அமெரிக்க பொருளாதாரங்கள் அல்லது சில ஐரோப்பிய பொருளாதாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

நுண், சிறு, நடுத்தர தொழில் (MSME) துறை தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். ஆனால் அவற்றை ஊக்குவிக்கும் வகையில் மாநிலத்தின் கொள்கைகள் இல்லை. நுண், சிறு, நடுத்தர தொழில் துறைக்கென தனி அமைச்சகத்தை ஒன்றிய அரசு கொண்டிருப்பது போல், விஜய் அந்த துறைக்கென ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்க வேண்டும், அது மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கும்.

1.5 மில்லியன் பொருளாதாரம் என்பது வெறும் முழக்கமாக இல்லாமல், உறுதியான நடவடிக்கைகள் தேவை.

தமிழாக்கம்: சங்கரந்தம்பி

தலையங்கம் தொடர்ச்சி...

பள்ளிக்கூடத்திற்கு வரும் மாணவர்கள் தப்புத் தப்பாக முடி வைத்து வருகிறார்கள், உள்ளே விடாதீர்கள், மொட்டை அடித்துவிடுங்கள் என்று சமூகநலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி பேசுகிறார். ஆனால், விஜயைப் பார்க்க பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விடுமுறை கொடுத்து அழைத்து வருகிறார்கள். கம்யூனிஸ்ட்டுகள், கரப்பான் கட்சி கூட்டத்திற்குதான் மாணவர் போகக்கூடாது. விஜயைப் பார்க்க வரலாம். வெயிலில் காத்துக் கிடந்து மயங்கலாம். விலைவாசி பற்றி கேட்டால் விஜயின் அமைச்சர்களோ, எல்லாவற்றிற்கும் காரணம் முந்தைய ஆட்சியாளர்கள், பதுக்கி வைத்துள்ளார்கள் என்று கூருணர்வேயில்லாமல் பழிபோட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கொலை, கொள்ளை, வழிப்பறி, ஆள் கடத்தல், போதை கலாச்சாரம், பாலியல் வன்முறை ஆகியவை குற்றவாளிகளுக்கு எந்தவொரு அச்ச உணர்வும் இன்றி அமோகமாக அன்றாடம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. காவல்துறையோ இவற்றைப்பற்றிய அக்கறையே இல்லாமல், ஆட்சியின் அவலத்தை, விலைவாசி உயர்வைச் சுட்டிக் காட்டிய எம்ஜடிஎஸ் பேராசிரியர் கலையரசனை, இடைத்தேர்தல் போது போராட்டம் நடத்திய நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை, காலங்காத்தாலே வந்து கைது செய்து இரவு உடையோடு அழைத்துச் செல்கிறார்கள். விஜய் ஆட்சியை விமர்சனம் செய்பவர்கள் எவ்வித காரணமும் இன்றி சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாக கைது செய்யப்படுகிறார்கள்.

தேனி சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பிச் சென்றனர். அதில் ஒரு கைதி, நாங்கள் தப்பிச் சென்றதற்குக் காரணம் பொய் வழக்கும் சிறைக் கொடுமையும்தான் என்று வீடியோ போட்டுள்ளார். பொய் வழக்குப் போடுவதிலும் எதிர்க்கட்சியினரைக் கைது செய்து சிறையில் அடைப்பதிலும் காட்டும் ஆர்வத்தை, அக்கறையை நடக்கும் குற்றங்களைத் தடுப்பதற்கு காட்டலாம்.

வாக்குத் திருட்டு நடத்திய ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி நடக்கும் ஜந்தர்மந்தர் 2.0 போராட்டத்தை தமிழ்நாட்டில் மாணவர், இளைஞர் நடத்துவதற்கும் சென்ற ஆட்சியில் போராட்டம் நடத்தியபோது, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று சொன்ன தவெக அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி செவிலியர், பல்நோக்குப் பணியாளர், தூய்மைப் பணியாளர் நடத்தும் அமைதிப் போராட்டங்களுக்கும் அனுமதி மறுத்து கைது செய்கிறது தவெக அரசின் காவல்துறை.

சென்னை விமான நிலையத்தை, பட்டினப் பாக்கத்தை, பல்கலைக்கழகங்களை, கல்வியை, குடிநீரை, மின்சார விநியோகத்தை, சுகாதாரப் பணிகளை, அரசாங்கப் பணிகளை, காவல்துறையைத் தவிர, எல்லாவற்றையும் தனியார் கையில் கொடுத்து பெரு முதலாளிகளைக் கொழுக்கச் செய்யத் துடிக்கும் விஜயின் அரசு தமிழக மக்களுக்கான அரசா? தனியார் வெற்றிக்கான அரசா? ❑



ரூபியோவும் எண்ணெய் வணிகமும்!

எஸ்.வி.ராஜதுரை

23 அக்டோபர் 2026

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ இரண்டு நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்திருந்தார். இந்தப் பயணத்தின்போது, உலகளாவிய எண்ணெய் சந்தைகளில் முக்கியப் பங்கு வகிக்கும் பில்லியனர் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான, குஜராத்தில் உள்ள ஜாம்நகர் சுத்திகரிப்பு வளாகத்தை அவர் பார்வையிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலத்தில் உள்ள ரிலையன்ஸின் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், உலகின் மிகப்பெரிய ஒற்றை வளாக சுத்திகரிப்பு நிலையமாகும். பல வழிகளில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் வணிகங்கள், தற்போது நிலவிவரும் உலகளாவிய எரிசக்தி நெருக்கடியின் திருப்புமுனையில் அமைந்துள்ளன.

அமெரிக்காவில் முக்கியமான இடைக்காலத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அங்கு டீசல் விலை உயர்ந்து வருவதுடன், ஈரான் மீதான போருக்கு மத்தியில் எண்ணெய் விலைகளைக் கட்டுப்படுத்தவும், ரஷ்ய எரிசக்தி வாங்குபவர்களைத் தண்டிக்கவும் வாஷிங்டன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தப் பெருநிறுவனம் மையமாக விளங்குகிறது.

மேலும், ரிலையன்ஸ் சமீபத்தில்தான் அமெரிக்காவில் ஒரு பெரிய முதலீட்டைச் செய்ய ஒப்புக் கொண்டுள்ளது. உலகளாவிய மூலதனத்தை ஈர்ப்பதில் தனது வெற்றிகளுக்கு உதாரணமாக அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகம் இதை மேற்கோள் காட்டியுள்ளது.

அமெரிக்க–இந்திய இருதரப்பு உறவு, தொடர்ச்சியான உரசல் புரசல்களாலும், எட்டப்படாத வர்த்தக ஒப்பந்தத்தாலும் பாதிக்கப்பட்டு, சீரற்ற நிலையில் இருக்கும் நேரத்தில், ரூபியோ தலைநகர் புது தில்லியையும் பிரதமரையும் புறக்கணித்து விட்டு அக்டோபர் 20, 2026 அன்று, நேராக மும்பைக்குச் சென்றார். இந்தியாவின் நிதி மையமான மும்பையில் சில சந்திப்புகளுக்குப் பிறகு, ரூபியோ அண்டை மாநிலமான குஜராத்தில் உள்ள ஜாம்நகருக்கு விமானத்தில் சென்றார். அரபிக்கடலில் அமைந்துள்ள ஜாம்நகர், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் சுத்திகரிப்பு வளாகத்தின் இருப்பிடமாகும். இது கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் எரிபொருள் ஏற்றுமதிக்கான முக்கிய மையமாக உள்ளது. மேலும் இது ஒரு நாளைக்கு 1.4 மில்லியன் பீப்பாய் (bpd) கச்சா எண்ணெயை சுத்திகரிக்கிறது.

ரூபியோ இந்த ஆண்டின் தொடக்கத்திலும் இந்தியாவிற்கு வந்திருந்தார். ஆனால் இந்தப் பயணம் "சற்று அதிக வணிக நோக்கம் கொண்டது" என்று இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதர் செர்ஜியோ கோர் கடந்த வாரம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ரூபியோவின் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட குறிப்பில், அவர் "வணிக முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக வணிகத் தலைவர்களைச் சந்திப்பார்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஜாம்நகரில் அவர் ரிலையன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சிலரைச் சந்திப்பார்," என்று கோர் கூறினார்.

ஜாம்நகரில் என்ன இருக்கிறது?

உலகின் மிகப்பெரிய ஒற்றைத் தள எண்ணெய் சுத்திகரிப்பு வளாகம், ஒரு நாளைக்கு 1.4 மில்லியன் பீப்பாய்கள் என்ற ஒருங்கிணைந்த கச்சா எண்ணெய் சுத்திகரிப்புத் திறனைக் கொண்டுள்ளது. இது உலகளாவிய சுத்திகரிப்புத் திறனில் கிட்டத்தட்ட 1.5 சதவீதம் ஆகும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வளாகத்தில் இரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன.

முதலாவது, 1999-ல் ஒரு நாளைக்கு 6,60,000 பீப்பாய்கள் (bpd) கொள்ளளவுடன் செயல்பாட்டிற்கு வந்த பிரதான நிலையம்.

இரண்டாவது, 2008-ல் ஒரு நாளைக்கு 5,80,000 பீப்பாய்கள் (bpd) கொள்ளளவுடன் செயல்பாட்டிற்கு வந்த, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட இரண்டாவது சுத்திகரிப்பு

நிலையம், இது ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இயங்குகிறது.

ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம் சர்வதேச விநியோகஸ்தர்களிடமிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து, சுத்திகரிக்கப்பட்ட பொருட்களை உலகளாவிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. பல சுத்திகரிப்பு நிலையங்களால் திறமையாகக் கையாள முடியாத, அதிக கந்தகம் நிறைந்த அடர்த்தியான கச்சா எண்ணெயை இந்த சுத்திகரிப்பு நிலையம் பதப்படுத்தி, அதை அதிக மதிப்புள்ள பொருட்களாக மாற்றுகிறது.

பின்லாந்தின் சிந்தனைக் குழுவான, 'ஆற்றல் மற்றும் தூய்மையான காற்று குறித்த ஆராய்ச்சிக்கான மையம்' (Centre for Research on Energy and Clean Air –CREA) மேற்கோள் காட்டிய தரவுகளின்படி, ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம் கடந்த செப்டம்பர் மாதம் சுமார் 143 மில்லியன் டாலர் மதிப்புள்ள எண்ணெய் பொருட்களை அமெரிக்காவிற்கு அனுப்பியுள்ளது.

ஜனவரி 2026 முதல் ரஷ்ய கச்சா எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை, மூன்றாம் நாடுகளில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்கள் ரஷ்ய கச்சா எண்ணெயையும் சுத்திகரிக்கும்போது, அந்த சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து ஐரோப்பாவிற்குள் பொருட்கள் நுழைவதை போதுமான அளவு தடுக்கவில்லை என்று CREA தனது அ றிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆக ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம் அந்தத் தடையில் ஓர் ஓட்டை விழச் செய்தது.

அமெரி க்காவில் நவம்பரில் நடைபெறவிருக்கும் இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக, பணவீக்கம், அதிகரித்து வரும் எரிபொருள் விலை ஏற்றம் ஆகியவற்றுக்கு மத்தியில் டிரம்பிற்கு மக்களின் ஆதரவு குறைந்துள்ள காலகட்டத்தில் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ரூபியோ பயணம் அமைந்துள்ளது. ராய்ட்டர்ஸ்/இப்சோஸ் கணக்கெடுப்பின்படி, சுமார் 31 சதவீத அமெரிக்கர்கள் மட்டுமே டிரம்பின் செயல்பாடுகளில் மகிழ்ச்சி அடைகின்றனர் – இது அவரது இரண்டு பதவிக் காலங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையாகும்.

உலக எரிபொருள் சந்தைகளை உலுக்கியுள்ள ரஷ்ய எரிசக்தி ஆலைகள் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு, உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியை டிரம்ப் நிர்வாகம் வலியுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

ரஷ்யா–உக்ரைன் போரும் ஜாம் நகர் சுத்திகரிப்பு ஆலையும்

ரஷ்யாவின் எண்ணெய் விற்பனையில் தாக்கம் ஏற்படுத்தும் அமெரிக்க முயற்சிகளில் ரிலையன்ஸும் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. பிப்ரவரி 2022–ல் உக்ரைன் மீது ரஷ்யா தனது முழு அளவிலான போரைத் தொடங்கியதிலிருந்து, சீனாவிற்கு அடுத்ததாக ரஷ்ய எண்ணெயை அதிக அளவு வாங்கும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. மேலும், இந்த இறக்குமதி அதிகரிப்புக்கு ரிலையன்ஸ் காரணமாக உள்ளது. 2022–க்கு முன்பு அதன் எண்ணெயில் 3 சதவீதம் மட்டுமே ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட நிலையில், 2025–க்குள் அந்தப் பங்கு 50 சதவீதமாக உயர்ந்தது.

எனவே, ரஷ்ய எண்ணெயை வாங்கியதற்காக புது தில்லியைத் தண்டிக்கும் விதமாக, ஆகஸ்ட் 2025–ல் டிரம்ப் இந்தியப் பொருட்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரியை விதித்தபோது, ரிலையன்ஸ் நேரடியாகப் பாதிக்கப்பட்டது. அடுத்தடுத்த மாதங்களில் ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்கும தியை அது கணிசமாகக் குறைத்தது. ஆனாலும் 2026 ஜூலை–செப்டம்பர் காலாண்டில் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையத்தில் பதப்படுத்தப்பட்ட எண்ணெயில் மூன்றில் ஒரு பங்காக ரஷியக் கச்சா எண்ணெய் இருந்தது.

தொடர்ந்து வரும் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியின் காரணமாக, கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின் கீழ், இந்தியப் பொருட்களுக்கு 100 சதவீத வரியை விதிக்க டிரம்ப் நிர்வாகம் தயாராக இருப்பதாகத் தோன்றியபோது, ரிலையன்ஸ் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. ஆனா ல், டிரம்ப்பால் முன்மொழியப்பட்ட வரிகளை அவரே நிறுத்தி வைத்துள்ளதன் காரணமாக, இது இந்திய அரசாங்கத்திற்கும் ரிலையன்ஸுக்கும் இருந்த கவலைகளை தணித்துள்ளன.

தினமும் மில்லியன் கணக்கான பீப்பாய் ரஷ்ய எண்ணெயை இந்தியா இன்னும் வாங்கினாலும், ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதிலிருந்து விலகி எண்ணெயைப் பல்வேறு நாடுகளிலிருந்து பெற்று இறக்குமதியை பலவகைப்படுத்தி வருவதாக ரூபியோ கூறியுள்ளார். "உதாரணமாக, இந்தியா போன்ற நாடுகள் தாங்களாகவே முன்வந்து தங்கள் எரிசக்தித் தொகுப்பை பலவகைப்படுத்தியுள்ளன, ஆனாலும் அவை இன்னும் கணிசமான அளவு எரிசக்தியை ரஷ்யாவிலிருந்து பெறுகின்றன. ஏனெனில் ஒரு நாளிலிருந்து அடுத்த நாளுக்கு மாறுவது கடினம் "என்றும் "இந்தியா அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடும் கூட்டாளியும் ஆகும் என்று ரூபியோ கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று (18.10.26) கூறினார்.

அமெரிக்காவில் ரிலையன்ஸின் முதலீடு

இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரரும், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் தலைவரும் நிர்வாக இயக்குனருமான முகேஷ் அம்பானி, முக்கியமாக எரிசக்தி தொடர்பான திட்டங்கள் மூலம் அமெரிக்காவில் முதலீடு செய்து வருகிறார்.

இது,டெக்சாஸில்உள்ளபிரவுன்ஸ்வில்துறைமுகத்தில் அமெரிக்கா ஃபர்ஸ்ட் ரிஃபைனிங் நிறுவனம் திட்டமிட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு உதவியளிக்கிறது. இது ஐம்பது ஆண்டுகளில் அமெரிக்காவின் முதல் பெரிய சுத்திகரிப்பு நிலையமாக வளர்ச்சியடையும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு 3 பில்லியன் முதல் 4 பில்லியன் டாலர் வரை செலவாகும் என்றும், இது ஆண்டுக்கு சுமார் 60 மில்லியன் பீப்பாய் அமெரிக்க கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலையின் உற்பத்தியில் பெரும் பங்கை வாங்குவதற்காக ரிலையன்ஸ் 20 ஆண்டு கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, மேலும் இதன் செயல்பாடுகள் 2029–ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் 2024–ல், ரிலையன்ஸின் அமெரிக்க துணை நிறுவனம், தனது குறைந்த கார்பன் எரிசக்தி உத்தியின் ஒரு பகுதியாக, ஹீலியம் ஆய்வு நிறுவனமான வேவ்டெக் ஹீலியத்தில் 21 சதவீத பங்குகளை 12 மில்லியன் டாலருக்கு வாங்கியது.

கடந்த மாதம், ரஷ்யாவுடன் ஆழமான தொடர்புகளைக்

கொண்ட ஒரு பெரிய எண்ணெய் நிறுவனமான இந்தியாவின் எஸ்ஸார் குழுமம், தனது துணை நிறுவனமான மெசாபி மெட்டாலிக்ஸ் மூலம் அமெரிக்காவில் 18 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒருங்கிணைந்த எஃகு முதலீட்டைத் திட்டமிட்டுள்ளதாக டிரம்ப் அறிவித்தார்.

எலான் மஸ்க்கின் கோபம்

ரிலையன்ஸின் அமெரிக்க முதலீடுகள் மற்றும் ஜாம்நகர் ஆலைக்கு ரூபியோவின் வருகை இருந்தபோதிலும், உலகின் மிகப் பெரிய பணக்காரரும் டிரம்பின் முக்கிய கூட்டாளியுமான எலான் மஸ்க், சமீபத்தில் அம்பானியை கடுமையாக சாடினார். அவரது ஸ்டார்லிங்க் விண்வெளி தொலைத்தொடர்பு நிறுவனம் இந்தியாவில் செயல்படுவதற்கான உரிமத்தைப் பெறுவதற்கு பல ஆண்டுகளாகப் போராடி வருகிறது.

சமீபத்தில் தொடர்ச்சியான X பதிவுகளில், சந்தையில் முன்னணியில் இருக்கும் அம்பானியின் தொலைத்தொடர்பு நிறுவனமான ஜியோவுக்கு ஆதரவாக, ஸ்டார்லிங்கின் நுழைவை பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் தடுத்து நிறுத்துவதாக மஸ்க் குற்றம் சாட்டினார். மஸ்க், அம்பானியை நேரடியாக "பிரதமர் அம்பானி" என்று விளித்து, "ஸ்டார்லிங்கை போட்டியிட அனுமதிப்பது குறித்து பரிசீலிப்பீர்களா" என்று கேட்டு கிண்டல் செய்தார். இந்தியர்கள் மீதான தங்கள் "ஏகபோக ஆதிக்கப் பிடியைப்" பாதுகாக்கும் "செல்வந்தர்களால்" ஸ்டார்லிங்க் தடுக்கப்படுவதாக மஸ்க் எழுதியிருந்தார்.

ரிலையன்ஸ் நிறுவனம் தனது Xதளத்தில் வெளியிட்ட அறிக்கையில், தாங்கள் "போட்டிக்கு ஒருபோதும் அஞ்சியதில்லை" என்றும், "உள்நாட்டு அல்லது சர்வதேச முதலீடு மற்றும் புதுமைகளை வரவேற்கும் இந்தியாவில் வளர்ந்துள்ளோம்" என்றும் கூறியுள்ளது. ஜாம்நகர் வளாகம் 216-க்கும் மேற்பட்ட கச்சா எண்ணெய் வகைகளைச் சுத்திகரித்துள்ளதாகவும், "இந்தச் சாதனையை நிகழ்த்திய ஒரே சுத்திகரிப்பு நிலையம் இதுவாகத்தான் இருக்கும்" என்றும் ரிலையன்ஸ் கடந்த மாதம் கூறியது.

வாஷிங்டன் உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தை மறுவடிவமைக்க முயல்வதால், ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறன், வெனிசுலா கச்சா எண்ணெய் இறக்குமதியை பெருமளவு அதிகரிக்க வழிவகுக்கிறது. இந்த ஆண்டுதொடக்கத்தில்அமெரிக்காவெனிசுலாவின்ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவைக் கடத்தி அமெரிக்க சிறையில் அடைத்துவிட்டு அந்த நாட்டைக் கைப்பற்றியது. பகுப்பாய்வு நிறுவனமான கேப்ளரின்(Kpler) மதிப்பீடுகளின்படி, ரிலையன்ஸ் நிறுவனத்தின் அக்டோபர் மாதக் கொள்முதல் நாளொன்றுக்கு சுமார் 3,50,000 முதல் 3,70,000 பீப்பாய்கள் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. "இன்னும் அதிக அளவில் வெனிசுலா கச்சா எண்ணெயை சுத்திகரிப்பது குறித்து ரிலையன்ஸுடன் நாங்கள் பேசுவோம்," என்று செவ்வாயன்று செய்தியாளர்களிடம் ரூபியோ சுருக்கமாகப் பேசினார்.

உலகளாவிய எரிசக்தி விநியோகத்திற்கு இந்த சுத்திகரிப்பு ஆலை ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?

உலகின் மிகப்பெரிய சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள் வழங்குநர்களில் ஒன்றாக, உலகளாவிய எண்ணெய் சந்தைகளை நிலையாக வைத்திருப்பதில் ரிலையன்ஸ் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. உதாரணமாக, செப்டம்பர் மாதத்தில், ஐரோப்பிய ஒன்றிய துறைமுகங்களில் எண்ணெய் பொருட்களை ஏற்றி வந்த ஏழு பெரிய சரக்குக் கப்பல்களில் ஆறு, ரிலையன்ஸ் நிறுவனத்தின் பொருட்களைக் கொண்டு வந்தன.

ரிலையன்ஸின் மிகப்பெரிய ஏற்றுமதி டீசல் ஆகும். அடுத்த மாத தொடக்கத்தில் அமெரிக்காவில் இடைக்காலத் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில், அமெரிக்காவில் டீசலின் விலை வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ளது டிரம்ப் நிர்வாகத்திற்குப் பெரும் கவலை அளித்துள்ளது.

பெட்ரோல் டீசல் என வகை வாரியான ஏற்றுமதித் தரவுகள் பொதுவில் வெளியிடப்படவில்லை என்றாலும், வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் மேற்கொண்ட பகுப்பாய்வின்படி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் 2025–ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஜாம்நகரிலிருந்து 21.66 மில்லியன் டன்கள் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், டீசல் 9.81 மில்லியன் டன்களுடன் மிகப்பெரிய பங்கைக் கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பெட்ரோல் 6.14 மில்லியன் டன்களாகவும், ஜெட் எரிபொருள் 2.06 மில்லியன் டன்களாகவும் இருந்தன.

இக்காலகட்டத்தில் ரிலையன்ஸின் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களில் 28 சதவீதம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது ரிலையன்ஸ் ஏற்றுமதி செய்த பெட்ரோல், டீசல் முதலியவற்றில் 28 விழுக்காடாகும்.

வெளியுறவு அமைச்சகத்தால் அறிவிக்கப்படாத ஒரு சந்திப்பை நேற்று (21.10.2026) மும்பையில் வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர் நடத்தினார். அதாவது ஐக்கிய அரபு எமிரேட்டுகளின் வெளியுறவு அமைச்சரையும் ரூபியோவையும் தனித்தனியாக சந்தித்த அவர் பின்னர் இருவரையும் ஒரே இடத்தில் சந்தித்துப் பேசினார்.

'தி ஹிந்து' நாளேட்டில் 22.10.26 அன்று வெளிவந்த செய்தியின்படி இந்தியா, அமெரிக்க, ஐக்கிய அரபு எமிரேட்டுகள் ஆகிய மூன்று நாடுகளும் எரிசக்தி, மூன்று நாடுகளுக்கு இடையிலான தொடர்பு, சமகால நிகழ்வுகள் ஆகியன பற்றிய தங்கள் பார்வைகளைப் பகிர்ந்து கொண்டதாக ஜெய்ஷங்கர் கூறினார். அமெரிக்காவின் ஈரான் போரின் காரணமாக வளைகுடா நாடுகளின் எண்ணெய் உற்பத்தி பாதிப்புக்குள்ளாகி வருவதால் மூன்று நாடுகளும் வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், பிரதேசத் தொடர்புகள் ஆகியவை பற்றி அமெரிக்க, ஐக்கிய அரபு எமிரேட்டுகள் ஆகியவற்றின் வெளியுறவு அமைச்சர்கள் விவாதித்ததாக இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதர் கூறினார் என்றும் ஆனால் இந்த மூன்று நாடுகளும் இஸ்ரேலுடன் 2021இல் உருவாக்கிக் கொண்ட '12U2' என்ற அமைப்பின் திட்டங்கள் பற்றியோ இந்தியாவின் 'மத்தியக் கிழக்குப் பொருளாதாரப் பாதை' (Middle East Economic Corridor) பற்றியோ விவாதிக்கவில்லை என்று 'தி ஹிந்து' நாளேடு கூறுகிறது.

அமெரிக்கா வெனிசுலாவில் கைப்பற்றியுள்ள எண்ணெய் வளங்களிலிருந்து கிடைக்கும் மிக அடர்த்தியான கச்சா எண்ணெயை சுத்திகரிக்க அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள் மறுக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.❑

- நன்றி மின்னம்பலம்

தோழர் ஸ்வதேஷ் (சம்பு ஜி)
ஒரு ஒப்பற்ற புரட்சியாளர்!



தோழர் சாரு மஜும்தார் தியாகியான இரண்டாவது நினைவுநாளில் நிறுவப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று உறுப்பினர் கொண்ட மத்தியக் கமிட்டியின் கடைசி உறுப்பினரான தோழர் ஸ்வதேஷ் இன்று நம்முடன் இல்லை. அந்த மறுசீரமைக்கப்பட்ட மத்தியக் கமிட்டியில் அவருக்கு நெருக்கமான இரண்டு தோழர்களும் வெகு காலத்திற்கு முன்பே நம்மை விட்டுப் பிரிந்துவிட்டனர். தோழர் சாரு மஜும்தாருக்குப் பிறகு இரண்டாவது பொதுச் செயலாளராக இருந்த தோழர் ஜாகர் (சுப்ரதா தத்), 1975 நவம்பர் 29 அன்று போஜ்பூரில் தியாகியானார். தோழர் ஜாகர் தியாகியானதற்குப் பிறகு கட்சியை வழிநடத்திய தோழர் வினோத் மிஸ்ரா–வும் 1998 டிசம்பர் 18 அன்று அகால மரணமடைந்தார். 1974 ஜூலை 28 முதல் இந்த நீண்ட ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக, தனது தனித்துவமான ஞானம், தன்னலமற்ற அர்ப்பணிப்பு, பொறுமை, விடாமுயற்சி ஆகியவற்றுடன் தோழர் சுவதேஷ் கட்சியை வழிநடத்தி வந்தார். இப்போது நமது பாதுகாவலரையும் அவரது நேரடி வழிகாட்டலையும் இழந்து விட்டோம்.

இந்த ஐம்பதாண்டுகளில் எவ்வளவோ மாறிவிட்டது. 1974–இல், தோழர் ஜாகர், விளம், ரகு (இது, கட்சி இரகசியமாக செயல்பட்ட நாட்களில் தோழர் சுவதேஷ் அவர்களின் பெயர்) ஆகியோர் இயக்கத்திற்குள் நிலவிய பெருங்குழப்பம், ஒழுங்கற்ற நிலை என்கிற பின்னணியில் அரசின் கடுமையான ஒடுக்குமுறைக்கு மத்தியில் தங்களது பணியைத் தொடர்ந்தனர். “கட்சியை உயிர்ப்புடன் வைத்திருங்கள்; மக்களின் நலன்களையே கட்சியின் உன்னத நலனாக உயர்த்திப்பிடியுங்கள்; அரசின் கடுமையான ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட பரந்த ஒற்றுமைக்கான அடித்தளத்தை உருவாக்குங்கள்” என்ற தோழர் சாரு மஜும்தாரின் இறுதி வார்த்தைகளே, புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மறுசீரமைக்கப்பட்ட மையக் குழுவிற்கு வழிகாட்டுதலாக அமைந்தன. கடுமையான சவால்களுக்கு மத்தியில், இந்தச் சிறிய மையக் குழு இயக்கத்தை வளர்த்தெடுத்து, அதை ஒரு உறுதியான அகில இந்திய அடித்தளத்தில் நிலைநிறுத்தியது. 1974 முதல் 1980 வரையிலான வளர்ச்சியின் மிக முக்கிய காலகட்டத்தில் தோழர் சுவதேஷ் பீகார் கட்சி அமைப்பைக் கவனித்துக் கொண்டார்.

இங்கே நாம் போஜ்பூரின் எக்வாரி கிராமத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற தோழர்கள் ஜக்தீஷ் மகதோ (மாஸ்டர் சாகேப்), ராம் நரேஷ் ராம், ரமேஷ்வர் யாதவ் ஆகிய மூவரையும் நினைவுகூர வேண்டும். அவர்களின் ஊக்கமளிக்கும் தலைமையின் கீழ், ஒரு துணிச்சலான போர்க்குணமிக்க நிலவுடைமை எதிர்ப்பு இயக்கம் ஷாஹாபாத் சமவெளிகளிலும் அதை ஒட்டிய மகத் பிராந்தியத்திலும் ஆழமாக வேரூன்றத் தொடங்கியது. பெருவாரியாக தலித் ஒடுக்கப்பட்ட ஏழைகளின் விழிப்புணர்வும் அறுதியிடலும் ஹரிஜனிஸ்தான் (ஹரிஜனதேசம்) கோரிக்கையையும் எழுப்பியது (அன்றிருந்த நிலவுடைமை பீகாரில் காந்தியின் ‘ஹரிஜன்’ என்ற சொல் தலித் எனும் அம்பேத்கரிய சொல்லை விட பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது). நக்சல்பாரியின் உணர்வு, எக்வாரியின் ஆற்றல் ஆகியவற்றின் ஒருங்கிணைவு மறுசீரமைக்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்)ஐ விரைவாக முன்னோக்கி உந்தித் தள்ளியது. புகழ்பெற்ற ‘எக்வாரி மூவர்’ முன்னோடிகளில், தோழர் ஜக்தீஷ் மாஸ்டர், ஒடுக்கப்பட்ட ஏழைகளின் எழுச்சி ஆரம்ப நிலையில் இருந்தபோதே 1972 டிசம்பர் 10 அன்று கொல்லப்பட்டார். தோழர் ரமேஷ்வர் 1975 ஜனவரி 14 அன்று சஹாரில் உள்ள சோனா டோலாவில் காவல்துறை மோதலில் தியாகியானார். தோழர் ராம் நரேஷ் ராம் 1980–இல் கட்சியின் பீகார் பிரிவின் செயலாளராகி, பின்னர் சஹார் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) சார்பில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1995 முதல் 2010 அக்டோபர் 26 அன்று அவரது மறைவு வரை பீகார் சட்டமன்றக் கட்சியின் தலைவராகப் பணியாற்றினார்.

1980–களில், சமூக கவுரவம், நில உரிமைகள், வாழ்வுதியம் ஆகியவற்றுக்காக பீகாரின் புரட்சிகர விவசாயிகள் இயக்கம் பெரும் விரிவாக்கத்தைக் கண்டது. நாட்டின் பல பகுதிகளிலும் இதுபோன்ற போராட்டங்கள் வெடித்தெழுந்தன. இந்திய மக்கள் முன்னணி உருவானதன் மூலம், பீகாரிலும் அதற்கு அப்பாலும் ஏற்பட்ட இந்த நிலவுடைமை எதிர்ப்பு விழிப்புணர்வின் எதிரொலி ஊக்கமளிக்கும் அகில இந்திய அதிர்வலையைப் பெற்றது. இந்திய மக்கள் முன்னணி பதாகையின் கீழ், பீகாரின் வாக்குரிமை மறுக்கப்பட்ட தலித்துகள், ஒடுக்கப்பட்ட சாதி உழைக்கும் மக்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையை நிஜ வாழ்க்கையில் பயன்படுத்தத் தொடங்கினர். 1989 நவம்பர் மாத மக்களவைத் தேர்தலில், போஜ்பூரின் போராடும் ஏழைகள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி, விவசாயக் கூலித் தொழிலாளர் தலைவர் தோழர் ரமேஷ்வர் பிரசாத்தை ஆரா தொகுதியிலிருந்து மக்களவைக்கு அனுப்பி வரலாறு படைத்தனர். தோழர்கள் வினோத் மிஸ்ரா, ராம் நரேஷ் ராம் ஆகியோருடன் சேர்ந்து, தோழர் சுவதேஷ் புரட்சிகர விவசாயிகள் இயக்கத்தின் இந்தப் மாபெரும் அரசியல் அறுதியிடலின் முக்கிய சிற்பியாக இருந்தார்.

1990–களோ வேறொரு மாதிரி தொடங்கின. பாஜகவும் ஆர்எஸ்எஸ்–ஸும் ‘ரத யாத்திரை’ என்ற பெயரில் மூர்க்கத்தனமான இயக்கத்தை ஆரம்பித்து, அதன்மூலம், கலவரங்களைத் தூண்டிவிட்டு இரத்தக் களரிகளாக்கினர்; இறுதியில், அரசமைப்புச் சட்டத்தையும் உத்தரப்பிரதேச அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்கு அளித்த உறுதிமொழியையும் அப்பட்டமாக

மீறி, 16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாபர் மசூதியை பட்டப்பகலில் இடித்துத் தள்ளின. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) இன் ஐந்தாவது மாநாடு கொல்கத்தாவில் தொடங்குவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு தான் இது நடந்தது. பாபர் மசூதி இடிப்பின் பின் இருக்கும் முக்கிய நோக்கத்தை கட்சி உணரத் தவறவில்லை. இந்தியாவில் வளர்ந்து வரும் மதவாத பாசிச அச்சுறுத்தலை ஐந்தாவது மாநாடு உணர்ந்து கொண்டது. மேலும், கட்சி வெளிப்படையாக கட்சியாகவும் களத்தில் முன்நின்று போராடவும் தீர்மானித்தது. அதோடுகூடவே கட்சிக்கு புதிய அலுவலக ரீதியான கட்டமைப்பும் அமைப்பு ரீதியான கட்டமைப்பையும் கட்டியெழுப்பும் புதிய சவாலும் முன்வந்தது. டெல்லியில் கட்சியின் புதிய மத்திய அலுவலகத்தை அமைக்கும் பொறுப்பைத் தோழர் சுவதேஷ் அவர்கள் ஏற்றுக்கொண்டார். சாரு பவன் என்று தற்போது அழைக்கப்படும் அந்த அலுவலகத்தை 2012 ஜூலை 28 அன்று உருவானது.

1970–களின் கடுமையான பின்னடைவுக்குப் பிறகு, கட்சியை மீட்டுருவாக்கம் செய்து வழிநடத்தியதிலிருந்து, ஒரு துடிப்புமிக்க கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்றியமைத்து பாசிச எதிர்ப்புப் போராட்டத்தின் சவாலான தற்போதைய கட்டத்திற்கு அதைத் தயார்படுத்தியது வரையிலும் மாறிக்கொண்டே இருக்கும் சூழ்நிலையின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் மோடி காலத்தில் பாசிச மூர்க்கத்தனம் தீவிரமடைவதால் ஏற்படும் சவால்களுக்கு மத்தியில், கட்சியின் தொடர்ச்சி மற்றும் தகவமைப்பு, ஒற்றுமை, நிலைத்தன்மை, ஒருங்கிணைப்பு, முதிர்ச்சி ஆகியவற்றின் வாழும் அடையாளமாக தோழர் சுவதேஷ் இருந்தார். கட்சியில் முழுநேர அமைப்பாளராக சேர்வதற்கு முன்பு, தோழர் சுவதேஷ் ராஞ்சியில் உள்ள பொதுத்துறை நிறுவனமான ஹெவி இன்ஜினியரிங் கார்ப்பரேஷனில் ஊழியராக பணியாற்றினார். இயக்கம் பின்னடைவை சந்தித்த காலகட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்)க்கு அரசு உற்சாகத்துடன் இரங்கலுரை எழுதிக் கொண்டிருந்தபோது, குழப்பமடைந்த, மனமுடைந்த புரட்சியாளர்கள் சிலர் உண்மையிலேயே பின்வாங்கத் தொடங்கியிருந்த நிலையில், தோழர் சுவதேஷ் அவர்கள் ஒரு தொழில்முறை புரட்சியாளராக முன்னோக்கி அடியெடுத்து வைத்தார். இந்த பிடிவாதமான முடிவும் உடல், மன உறுதியும் அவரது முழு கம்யூனிஸ்ட் வாழ்க்கையையும் வரையறுத்தன. கடந்த சில ஆண்டுகளில் புற்றுநோயுடன் போராடியபோதும்அவர்கட்சியின்அன்றாடநடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். மருத்துவமனையில் இருந்தபோதும் ஜென் சி போராட்டங்களையும் அகில இந்திய மாணவர் கழக தோழர்களின் ஆற்றல்மிக்க துணிச்சலான பங்கையும் ஆர்வத்துடன் கவனித்து வந்தார். பேச முடிந்த கடைசி தருணம் வரை, கட்சி அமைப்பை வலுப்படுத்துவது, கட்சியின் பங்களிப்பை அதிகரிப்பது பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருந்தார்.

சென்று வாருங்கள் தோழர் சம்புஜி (இந்தியா முழுவதும் உள்ள தோழர்களிடையே தோழர் சுவதேஷ் அவர்களின் மிகவும் பரவலாக அறியப்பட்ட பெயர் சம்புஜி ஆகும்). வீரத்துடன் இளைப்பாறுங்கள்! உங்கள் அன்பிற்குரிய கட்சி, உங்களின் முடிக்கப்படாத இலட்சியப் பணியை நிறைவேற்ற தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும். ❑

தோழர் சம்பு ஜிக்கு செவ்வஞ்சலி













வேலையின்மையிலிருந்து, கடன் சங்கிலியில் இருந்து விடுதலை பெற
ஒன்றிய பாஜக ஆட்சி, தவெக ஆட்சிகளை எதிர்த்துப் போராட

அவிகிதொச 7வது மாநில மாநாடு அறைகூவல்



அனைத்திந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கத்தின் 7வது மாநில மாநாடு 2026 அக்டோபர் 26 அன்று மாலை தோழர்கள் நாகபூஷன்–ராம் நரேஷ் ராம்–டிகேஎஸ் ஜனார்த்தனன் அரங்கில் (புதுக்கோட்டை, விஜய் பேலஸ்) கொடியேற்றத்துடன் துவங்கியது. சங்கத்தின் கொடியை மத்திய பார்வையாளர், அவிகிதொச தேசிய ஒருங்கிணைப்பாளரும் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி மாணவருமான தோழர் நிவாஸ் பிரகாஷ் ஏற்றினார். இகக(மாலெ) அவிகிதொச தலைவர்களும் பிரதிநிதிகளும் தியாகிகள் நினைவுச் சின்னத்திற்கு அஞ்சலி செலுத்திய பின் பொது மாநாடு தொடங்கியது. தோழர்கள் ஜானகிராமன், மணிமேகலை, ஜெசிந்தா, நாராயணன், ஈஸ்வரி, முருகேசன், நாகப்பன் ஆகிய 7 பேர் கொண்ட தலைமைக் குழு மாநாட்டிற்கு தலைமை தாங்கி வழிநடத்தியது. தோழர் ஜோதிவேல் வரவேற்புரை ஆற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் எஸ்.குமாரசாமி மாநாட்டைத் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி மாநாட்டை வாழ்த்திப் பேசிய பின், சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் என்.குணசேகரன் மாநாட்டுப் பிரகடனத்தை முன்வைத்தார்.

அக்டோபர் 27, இரண்டாம் நாள் பிரதிநிதிகள் அமர்வில், முன்வைக்கப்பட்ட மாநாட்டுப் பிரகடனத்தின் மீது, பிரதிநிதிகள் கருத்துகள், ஆலோசனைகளை முன் வைத்தனர். 23 மாவட்டங்கள், 40க்கும் மேற்பட்ட ஒன்றியங்களில் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள் நிலம், வேலை, கடன் நெருக்கடி, வீட்டுமனை, வீடு பிரச்சனைகள் மீது விடாப்பிடியான போராட்டங்களை நடத்த வலியுறுத்திப் பேசினர்.

மாநாட்டை வாழ்த்தி, இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் சோ.பாலசுப்பிரமணியன், புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் சி.ரெங்கசாமி, ஏஅய்சிசிடியு மாநில சிறப்புத் தலைவர் டி.சங்கரபாண்டியன், ஏஅய்கேஎம் மாநிலச் செயலாளர் அய்யந்துரை, அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநில அமைப்பாளர் ரேவதி, புரட்சிகர இளைஞர் கழக பொதுச் செயலாளர் ஜி.தனவேல், நீதிக்கான மக்கள் இயக்கத்தின் மாநில அமைப்பாளர் அ.சிம்சன், அவிகிதொ சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவர் பாலசுந்தரம், மத்திய பார்வையாளர் நிவாஸ் பிரகாஷ் மற்றும் பலரும் வாழ்த்திப் பேசினர். தோழர் நிவாஸ் உரையை தோழர் கே.ஜி. தேசிகன் தமிழாக்கம் செய்தார்.

ஏறத்தாழ 350 பேர் கலந்து கொண்ட பிரதிநிதிகள் மாநாடு, 57 பேர் கொண்ட பொதுக்குழு, 25 பேர் கொண்ட செயற்குழு, 11பேர் கொண்ட நிர்வாகக் குழுவை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது. மாநிலத் தலைவராக எஸ்.ஜானகிராமன், மாநிலப் பொதுச்செயலாளராக தோழர் சி.ராஜசங்கர் தேர்வு செய்யப்பட்டனர். துணைத் தலைவர்களாக வீ.மூ. வளத்தான், மாசிலாமணி, ஈஸ்வரி, முருகேசன், ஆகியோரும் செயலாளர்களாக மணிமேகலை, நாராயணன், ஜெசிந்தா, தவச்செல்வன் ஆகியோரும் மாநில ஆலோசகராக என். குணசேகரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இகக(மாலெ) கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் வீ. சங்கர் மாநாட்டை வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

மாநாட்டுத் தீர்மானங்களை சி.ராஜசங்கர் முன்மொழிய மாநாடு ஒருமனதாக நிறைவேற்றியது. சிவப்பு, வெள்ளை உடைகளில் வந்திருந்த கணிசமான பெண் பிரதிநிதிகள் மாநாட்டை வண்ணமயமாக்கினர். இறுதியாக தலைவர்கள், தொண்டர்கள் கவுரவிக்கப்பட்டனர். பாசிச பாஜக ஆட்சியை வெளியேற்ற கிராமப்புறப் பாட்டாளிகளை அணிதிரட்ட உறுதியேற்கும் எழுச்சி முழக்கங்களுடன் மாநாடு நிறைவுற்றது.

அவிகிதொச 7வது மாநில மாநாட்டுத் தீர்மானங்கள்

அஞ்சலி தீர்மானம்

நக்சல்பாரி புரட்சிகர விவசாய இயக்கத்தை கிராமப்புறங்களில் வேரூன்றச் செய்ததிலும் விவசாயத் தொழிலாளர், கிராமப்புறத் தொழிலாளரை அரசியல் களத்தில் வெற்றிகரமாக மேலெழுந்து வரச்செய்ததிலும் பெரும் பங்களிப்பைச் செய்த தோழர்கள் நாகபூஷன் (அக்.9) – ராம்நரேஷ் ராம் (அக்.26) – டிகேஎஸ்.ஜனார்த்தனன் (அக்.27) நினைவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த மாநாடு, அவர்களுக்கு புரட்சிகர அஞ்சலியைச் செலுத்துகிறது.

இஸ்ரேல்–அமெரிக்க கூட்டுப் போரால் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனிய மக்களுக்கு, ருஷ்ய–உக்ரேன் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு மாநாடு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அண்மையில் மறைந்த, நீண்டகால கட்சி ஊழியர் தோழர் பாண்டியன்

(சென்னை) உள்ளிட்டு 6வது மாநில மாநாட்டிலிருந்து இது வரையிலும் மறைந்த அவிகிதொச, இகக(மாலெ) தோழர்களுக்கும் பல்வேறு இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு அரசியல், பண்பாட்டு ஆளுமைகளுக்கும், தொழிலாளர் வர்க்க இயக்க முன்னோடிகளுக்கும் கார்ப்பரேட், பாசிச எதிர்ப்பு விவசாயிகள் போராட்டத்தில் உயிர்நீத்தவர்களுக்கும் கார்ப்பரேட் எதிர்ப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்புப் போராட்டங்களில் உயிர்நீத்தவர்களுக்கும், கொரோனா கொடும் கொரோனா கிருமி தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், இடி, மின்னல் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்கும் பட்டாசு வெடி விபத்து, மலக்குழி சுத்தம் செய்தல், தூய்மைப்பணி, தொழிற்சாலை விபத்தில் உயிரிழந்த புலம் பெயர் தொழிலாளர் உள்ளிட்ட பணியிட இறப்புக்கு ஆளானவர்களுக்கும் இந்த மாநாடு தனது அஞ்சலியையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

பிரேசில் மக்கள் தீர்ப்புக்கு வாழ்த்து!

உலகம் முழுவதுமுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கு பெரும் உற்சாகம் அளிக்கிற வகையிலும், அடாவடி ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க வல்லரசு அரசியலுக்கும் அவரது பிரேசிலிய தீவிர வலதுசாரி கூட்டாளி போல்ஸனரோவுக்கும் பலத்த அடிகொடுக்கிற வகையிலும் 4வது முறையாக லூலாவை வெற்றிபெற வைத்த லத்தின் அமெரிக்காவின் பிரேசில் தேர்தல் முடிவை மாநாடு வரவேற்கிறது. உலகம் முழுவதும் மக்கள் சார்பு கொள்கைகளுக்காக மக்கள் போராட்டங்கள் தீவிரம் பெற்று வரும் வேளையில், பிரேசில் லூலா அரசின் மக்கள் சார்பு கொள்கைகளுக்கு அழுத்தமான ஆதரவளிக்கிற வகையில் பிரேசில் மக்கள் தீர்ப்பை மாநாடு வரவேற்று வாழ்த்துகிறது.

தலைமைத் தேர்தல் ஆணையரை பதவிநீக்கம் செய்ய வேண்டும்

இந்திய குடிமக்கள் 13 கோடிக்கு மேற்பட்டோரது வாக்குரிமையைப் பறித்து கொடூர குற்றம் புரிந்த தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்; சிறப்பு வாக்காளர் திருத்த நடவடிக்கையை ரத்து செய்யவேண்டும்; தேர்தல் ஆணையர் தேர்வு தொடர்பான 2023 திருத்தச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென ஒன்றிய அரசை மாநாடு வலியுறுத்துகிறது. நாட்டு மக்களின் வாக்குரிமையை மீட்டெடுக்கவும் சுதந்திரமான, நியாயமான தேர்தல் முறையைப் பாதுகாக்கவும் நாடுதழுவிய அளவில் நடக்கும் மாணவர், இளைஞர், குடிமக்கள் நடத்திவரும் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை மாநாடு முழுமனதுடன் ஆதரிக்கிறது. எல்லாவகையிலும் இந்தப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய மாநாடு உறுதி ஏற்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போராடி வரும் இளைய தலைமுறையின் போராட்டங்களை மூர்க்கத்தனமாக நசுக்கத் துடிக்கும் பாசிச மோடி அரசாங்கத்தை மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

மீண்டும் வேண்டும் மகாத்மா காந்தி ஊரக வேலைத்திட்டம்

நாட்டிலுள்ள கிராமப்புற வறிய மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தை ஒழித்துக்கட்டி, வேலை வாய்ப்பு உத்தரவாதத்தின் மீது கொடும் தாக்குதலை நடத்தியுள்ள மோடி அரசாங்கத்தை மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆண்டுக்கு200நாள்கள்வேலையும்;நாளொன்றுக்குரூ1000 ஊதியமும்; செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் புகுத்தி தொழிலாளரை வேலையிலிருந்து விரட்டியடிக்கும் கருவிழி, விரல் ரேகை படம் எடுக்கும் முறையை நீக்க வேண்டும்; திட்டத்தை விவசாயத்துக்கும் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி மேம்படுத்தப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது. தேர்தல் வாக்குறுதிப்படி, நிபந்தனைகள் எதுவுமின்றி 25 நாள்கள் வேலை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். விவசாய, கிராமப்புர தொழிலாளருக்கு ஓய்வூதியம் மாதம் ரூ.10,000, இலவச மருத்துவக் காப்பீடு, வேலைசெய்யும் இடத்தில் மரணமுற்றால் நிவாரணம் ரூ. பத்து லட்சம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு விரைந்து செயல்படுத்திட வேண்டும். காவிரி நீர் வராததாலும் அரிசி, பருப்பு போன்ற உணவுப்பொருள் விலை உயர்வாலும் துயரமடைந்துள்ள விவசாய, கிராமப்புர தொழிலாளருக்கு துயர் துடைப்பு நிவாரணமாக தவெக அரசு ரூ.10,000 வழங்கிட வேண்டுமெனவும் மாநாடு வலியுறுத்துகிறது. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஒன்றிய, மாநில அரசுகளை வலியுறுத்தி தொடர் போராட்ட இயக்கங்களை நடத்தவும் மாநாடு முடிவுசெய்கிறது.

வீட்டுமனை, வீடு அடிப்படை உரிமையாக்கிட வேண்டும்.

வீட்டுமனை, வீடு வறிய மக்களின் அடிப்படை வாழ்வாதாரமாகவும் அடையாளமாகவும் உள்ளது. ஒன்றிய, மாநில ஆட்சிகளின் கவர்ச்சிகரமான பல திட்ட அறிவிப்புகளுக்குப் பிறகும் மாநிலத்தில் பல பத்து லட்சம் கிராமப்புர வறிய மக்கள் வாழத்தகுந்த வீடுகள் இல்லாமலும், குடியிருக்கும் இடங்களுக்கு பட்டா இல்லாமலும் பல தலைமுறைகளாக துயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். திமுக ஆட்சியில், 22 லட்சம் பட்டாக்கள் கொடுத்துள்ளோம்; தவெக ஆட்சியில் 27 லட்சம் பட்டாக்கள் கொடுக்கப் போகிறோம் என்ற வெற்று அறிவிப்புகள் தொடர்ந்து வருகின்றன. அதேவேளை, வீட்டுமனை இருந்தால்தான் அரசாங்கத் திட்டங்களில் வீடு கிடைக்கும் என்ற தவறான நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன.

இந்த அருவருக்கத்தக்க நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வீடு, வீட்டுமனை இல்லாதவர், குடிமனைக்கு பட்டா இல்லாதவர்களின் கணக்கெடுப்பை நடத்திட வேண்டும். அனைவருக்கும் வீட்டுமனையுடன் கூடிய வீடு, குடியிருக்கும் இடங்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும். அரசு வசமுள்ள நிலங்களை வகை மாற்றம் செய்து வீட்டு மனை, வீடு திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கிட வேண்டும். ஒன்றிய, மாநில அரசாங்கங்கள் வீடுபெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்கி சட்டம் இயற்ற வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது.

முற்போக்கான தீவிர நிலச் சீர்திருத்தக் கொள்கை வேண்டும்

மிட்டா, மிராசுகளின் முதுகெலும்பை ஒடித்த கட்சி எனப்பேசினாலும் 'நிலப்பிரபுத்துவம் வீழ்ந்த கதை'

என ஆய்வு நூல்கள் வந்தாலும் கடந்தகால திராவிட ஆட்சிகள் முற்போக்கான தீவிர நிலச் சீர்திருத்தத்தை செய்யத் தவறிவிட்டன. அதனாலேயே மக்கள் பெரிய எதிர்பார்ப்புகளுடன் தவெக ஆட்சிக்கு வாக்களித்துள்ளனர். விவசாயத்துக்கும், உணவுப் பாதுகாப்புக்கும் புத்துயிர் ஊட்டுகிற வகையில் மக்கள் சார்பு நில மறு விநியோகக் கொள்கையை தவெக ஆட்சி செயல்படுத்திட வேண்டும். நில உச்சவரம்பின் அளவைக் குறைப்பது, கோவில், மடம், அறக்கட்டளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள விதிவிலக்குகளை ரத்து செய்வது, குத்தகை சாகுபடியாளர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவது, பஞ்சமி நிலங்களை சட்டவிரோத ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு தலித்துகளுக்கே வழங்குவது, மத நிறுவன நிலங்களில் குடியிருப்போருக்கு நிலத்தை சொந்தமாக்குவது, வன உரிமைச் சட்டம் 2006ன்படி பழங்குடி மக்களுக்கு நில உரிமை வழங்குவது, இனாம் நிலங்களை அபகரிக்க முயலும் கோவில் நிர்வாக முயற்சிகளை முறியடிக்க, வழக்குகளைக் காட்டி இழுத்தடிக்கும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி, இனாம் ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாக செயல்படுத்த உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது உள்ளிட்ட மக்கள் சார்பு நில மறு விநியோக நடவடிக்கைகளை தவெக அரசு அவசர அடிப்படையில் செயல்படுத்திட வேண்டுமென வலியுறுத்துகிறது.

உள்ளாட்சித் தேர்தல்களை விரைந்து அறிவிக்க

தேர்தல் ஜனநாயகப் பாதையில் அதிகாரத்துக்கு வந்துள்ள தவெக, உள்ளாட்சி ஜனநாயகத்தை மறுத்து அதிகாரிகள் ஆட்சிக்கு வழிவகுத்துள்ளது. தவெக ஆட்சியின் இந்த ஜனநாயக விரோதச் செயலைக் கண்டிப்பதோடு விரைந்து உள்ளாட்சி தேர்தல் அறிவிப்பை வெளியிட வேண்டுமென மாநாடு வற்புறுத்துகிறது.

நினைவுச் சின்னங்கள்

வரலாற்றுச்சிறப்புமிக்க கோவை சின்னியம்பாளையம் தியாகிகளுக்கும், கார்ப்பரேட் ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தில் கொல்லப்பட்ட தூத்துக்குடி தியாகிகளுக்கும் அரசு நினைவுச்சின்னங்கள் எழுப்பிட வேண்டும். தொழிற்சங்க ஜனநாயகத்துக்காகவும் தொழிலாளர் உரிமைக்காகவும் வீரமிக்க வகையில் போராடியதுமட்டுமின்றி கிராமப்புற தொழிலாளரை அவிகிதொசவில் அணிதிரட்டிய பெருமைக்குரிய பிரிக்கால் தொழிலாளரது போராட்டத்தில் அநீதியாக ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு 2011 டிசம்பர் முதல் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலுள்ள தோழர்கள் மணிவண்ணன், ராமமூர்த்தி இருவரையும் கருணை அடிப்படையில் முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டுமென தமிழ்நாடு அரசை மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. அவர்களது விடுதலையைக் கோரி வரும் டிசம்பரில் எஅய்சிசிடியு நடத்த உள்ள மாநிலம் தழுவிய இயக்கத்தில் பங்கு பெறுவதென்றும் மாநாடு முடிவு செய்கிறது.

“சமூகநீதி” அரசு செயல்பட வேண்டும்

தமிழ்நாடு முழுவதும் தலித், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்கள் உரிய இடுகாடு, சுடுகாடு வசதிகளின்றி துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். சமீபத்தில் நாமக்கல் மாவட்டப் பகுதியில் பிணத்தை எரியூட்டுவதற்கு அனுமதிக்க வேண்டி பொதுவெளியில் உயர்சாதி பிரதிநிதிகளது காலில் விழுந்து வணங்கும் வன்முறை அரங்கேற்றப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களிலுள்ள கல்விக் கூடங்களில் தலைவிரித்தாடிய சாதி ஆணவக் கொடூரங்கள் மேற்கு மாவட்டங்களுக்கும் பரவி வருகிறது. கோவையில் பள்ளி மாணவன் அகிலன் சாதிய துன்புறுத்தலால் தற்கொலை செய்துகொண்ட கொடூரச்செய்தி நாகரிக சமுதாயத்தின் மனசாட்சியை உலுக்குவதாக உள்ளது. காதல் வெறுப்பு சாதி ஆணவக் கொலைகள், பெண்கள், சிறுமிகள் மீது தொடரும் ‘வீரமணி வகை’ வன்முறைகள் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சமூகக் கொள்கைகளை தவெக ஆட்சி விரைந்து செயல்படுத்திட வேண்டும். பொது சுடுகாடு/இடுகாடு முறையை கொண்டுவருவது, ஆணவக் கொலை தடுப்புச் சட்டத்தை விரைந்து கொண்டு வருவது, நீதிபதி சந்துரு, அருணாஜெகதீசன் ஆணையங்களின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவது, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவது உள்ளிட்டவற்றை விரைவாக நிறைவேற்றிட வேண்டும். இதன்மூலம், சாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு மரபு கொண்ட தமிழ்நாட்டில், தலித்துகள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பெண்கள், சிறுமிகள், விளிம்புநிலைப் பிரிவினர் ஆகியோரது பாதுகாப்பையும் கண்ணியத்தையும் உறுதிப்படுத்த தேவையான சமூக நடவடிக்கைகளை ‘சமூகநீதி’ அரசு என பிரகடனம் செய்து கொண்டுள்ள தவெக ஆட்சி தாமதமின்றி செய்திட வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது. கார்ப்பரேட் திட்டங்களைக் கைவிட வேண்டும்

தீவிர காலநிலை நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் விவசாயத்தையும், உணவுப் பாதுகாப்பையும், சுற்றுச் சூழலையும் மேலும் மோசமாக நாசப்படுத்தும் ஹைட்ரோகார்பன், சோலார் மின் உற்பத்தி உள்ளிட்ட கார்ப்பரேட் பெருந்தொழில் திட்டங்களையும் மீனவர் வாழ்வை, சுற்றுச்சூழலை அச்சுறுத்தும் பட்டினப்பாக்கம் தலைமைச் செயலகத் திட்டத்தையும் தவெக ஆட்சி கைவிட வேண்டுமென்று மாநாடு வலியுறுத்துகிறது.

வேங்கை வயல் தலித்துகளுக்கு நீதி வேண்டும்

தமிழர் நாகரிகம், பண்பாட்டு மரபு மீதும் தமிழ்நாட்டின் முற்போக்கு மானுட வரலாற்றின் மீதும் தொடுக்கப்பட்ட அருவருப்பான தாக்குதலாக கடந்த திமுக ஆட்சிக்காலத்தில் வேங்கை வயல் தலித்துகள் அருந்தும் தண்ணீரில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட கொடும் இழிவு நடந்தது. அதைவிடவும் கொடூரமாக அந்தச் செயலுக்கு தலித்துகளையே குற்றவாளிகளாக்கி வழக்கு நடத்தப்பட்டு வருகிறது. சமூகநீதி கொள்கைப் பிரகடனத்தை அறிவித்துள்ள தவெக ஆட்சி, சமூக அநீதிக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளான வேங்கை வயல் தலித்துகளுக்கு நீதி வழங்கும் விதமாக விரைந்து மறுவிசாரணை செய்து உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்; குற்றம்சாட்டப்பட்டுள்ள தலித்துகளை விடுவிக்க வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது.

தூய்மைப் பணியாளர், டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டத்துக்கு ஆதரவு

சென்னையில் தொடங்கி நடந்துவரும் தூய்மைப் பணியாளர்களின் சமூகநீதி, சமத்துவம், சமூக கண்ணியத்துக்கான போராட்டத்தை மாநாடு முழுமனதுடன் ஆதரித்து

ஒருமைப்பாடு தெரிவிக்கிறது. மாநிலம் முழுவதுமுள்ள தூய்மைப்பணியில் ஒப்பந்த முறையை ரத்து செய்து, அனைத்துவகை தூய்மைப் பணியாளர்களுக்கும் சமவேலைக்கு சம ஊதியத்தை செயல்படுத்திட வேண்டும். தவெக தேர்தல் வாக்குறுதிப்படி 5 ஆண்டுகள் பணிபுரிந்த அனைத்துவகை தூய்மைப் பணியாளர்கள் தூய்மைக் காவலர் அனைவரையும் நிரந்தரப்படுத்திட வேண்டும். தமிழ்நாடு முழுவதும் டாஸ்மாக் கடைகளை மூடிவிட்டு ஊழியர்கள் அனைவருக்கும் பணிநிரந்தரத்துடன் மாற்று அரசுப்பணி வழங்கிட வேண்டுமென்ற அவர்களது நியாயமான கோரிக்கையை தவெக அரசு ஏற்று விரைந்து செயல்படுத்திட வேண்டுமென மாநாடு கோருகிறது. நிரந்தரமின்றி பணியாற்றிவரும் சத்துணவு பணியாளர், திட்டத் தொழிலாளர், செவிலியர், ஆசிரியர்கள், அரசு ஊழியர்களை நிரந்தரப்படுத்திட வேண்டும். அரசு காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது.

பரந்தூர் விவசாய நிலத்தை விவசாயிகளிடமே ஒப்படைக்க வேண்டும்

தவெக தேர்தல் வாக்குறுதிகள் படி விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்தை மாநாடு ஆதரிக்கிறது; விவசாயிகளின் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்துகிறது. கடந்த திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது. கைவிடப்பட்ட பரந்தூர் விமான நிலையத்திற்காக கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்களை மாற்று தொழில் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல் விவசாயிகளிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது.

பல்கலைக் கழக சட்டத்தைக் கைவிட வேண்டும்

கல்வியை வணிக மயமாக்கவும் கல்வியில் சமூகநீதியை மறுக்கவும் ஆபத்தான தேசிய கல்விக் கொள்கை 2020 அய் ஒன்றிய பாஜக அரசு நிறைவேற்றியுள்ளது. அதை பின்பற்றி புற்றீசல் போல் தனியார் பல்கலைக் கழகங்களை உருவாக்கும் புதிய பல்கலைக் கழக சட்டத்தை தவெக ஆட்சி திரும்பப்பெற வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது. கல்லூரிகள், பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்தும் விதமாக மாணவர் பேரவைத் தேர்தல்களை நடத்திட வேண்டுமெனவும் தவெக அரசை மாநாடு வலியுறுத்துகிறது.

மார்ச் 23 இடதுசாரி பேரணி வெல்க!

15. இகக(மாலெ), இகக, இகக(மா) ஆகிய மூன்று இடதுசாரி கட்சிகள் சேர்ந்த இடதுசாரி ஒருங்கிணைப்புக் குழு, 2027 மார்ச் 23 பகத்சிங் நினைவு நாளன்று திருச்சியில் மாபெரும் இடதுசாரி பேரணியை நடத்த முடிவு செய்துள்ளது. கிராமப்புற தொழிலாளர், உழைக்கும் மக்களின் அரசியலான இடது அரசியலை முன் களத்துக்கு கொண்டுவர எத்தனித்துள்ள இப்பேரணியில் பல்லாயிரக்கணக்கில் விவசாய, கிராமப்புற தொழிலாளியை அணிதிரட்டி பேரணியை மாபெரும் வெற்றிபெறச் செய்ய அவிகிதொச மாநில மாநாடு உறுதி ஏற்கிறது.❑

தோழர் டெலிபோன் பாண்டியன் அவர்களுக்கு செவ்வஞ்சலி



தோழர் மூர்த்தி என்கிற த.பாண்டியன் (வயது 73). நீண்ட கால உடல்நலக்குறைவு காரணமாக 2026 அக்டோபர் 1 அன்று சென்னையில் காலமானார். தோழர் பாண்டியன் சிபிஐஎம்எல் லிபரேசன் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராகவும் சென்னை மாவட்டச் செயலாளராகவும் செயலாற்றியவர். தொலைபேசித் துறை (BSNL) ஊழியராகப் பணியாற்றிய தோழர். பாண்டியன். கட்சியின் அகில இந்தியத் தொழிலாளர் வர்க்கப் பிரிவின் உறுப்பினராகவும். மாநிலத்தில் தொலைபேசி. தந்தித் துறை கட்சிப் பணிகளுக்குப் பொறுப்பாளராகவும் செயல்பட்டார். மாநிலத்தில் உள்ள தபால். தொலைத்தொடர்பு (P&T) ஊழியர்களிடையே நமது தொழிற்சங்கம். கட்சி நடவடிக்கைகளை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றினார்.

ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டம் தென்காசி. சுந்தரபாண்டியபுரம் அருகே திருச்சிற்றம்பலம் கிராமத்தில் பிறந்தவர். சுந்தரபாண்டியபுரம் தோழர் மாயாண்டி மூலம் சிபிஐஎம்எல் கட்சிக்கு வந்தவர். தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் படிக்கும் போது மாணவர்கள் மத்தியில் புரட்சிகர கருத்துக்களை எடுத்துச் சென்றவர். பிறகு தொலைபேசித் துறையில். இளநிலைப் பொறியாளராக வேலைக்கு சேர்ந்து. திண்டுக்கல் நகரில் பணியாற்றும் போதும். கட்சிப் பணிகளை தொடர்ந்து செய்து வந்தார். சென்னைக்கு மாற்றலாகி வந்தபின்னர் சென்னை கட்சிப் பணிகளில் ஈடுபட்டார். தொலைபேசி துறையில் பணியாற்றியபோது. 'போர்க்குரல்' என்ற பத்திரிகை வெளிவருவதில் முக்கிய பொறுப்பு வகித்தவர். தோழர் பாண்டியன். கட்சியின் தலைமறைவு காலத்திலிருந்தே துடிப்புடன் செயல்பட்டவர். மாநிலக் கட்சியின் நெருக்கடியான காலகட்டங்களில் முக்கிய பங்காற்றியுள்ளார்.தோழர் பாண்டியனுக்குச் செவ்வணக்கம்!





வீட்டுமனை, வீடு இல்லாத ஏழைகள் குடியேறும் போராட்டம்

தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், உள்ளிக்கடை ஊராட்சியில் உள்ள வறிய மக்களுக்கு வீட்டுமனை கோரி கடந்த மூன்று ஆண்டுகளாக சிபிஐ(எம்எல்), அவிகிதொச வும் பல கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றன. மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளிக்கப்பட்டது ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டங்களும் நடத்தப்பட்டன. ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை. அதனால், அக்டோபர்–15 அன்று கணபதி அக்ரகாரத்தில் மீண்டும் சாலைமறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, வட்டாட்சியர் தலைமையிலான பேச்சுவார்த்தையில் அக்டோபர்–30க்குள் வீட்டுமனைப்பட்டா வழங்குவதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அதன் பேரில் போராட்டத்தைக் கைவிட்டு மக்கள் காத்திருந்தனர். இந்நிலையில் கோரிக்கையை அதிகாரிகள் அலட்சியபடுத்தியதால் மக்கள் அனைவரும் வட்டாட்சியர் இறுதிக் கெடுவாக சொல்லியிருந்த 30/10/2026 இரவு 12 மணிக்கு மக்கள் குடியேறினர்.

கட்சி, சங்க வழிகாட்டுதலின்படி, ஒரு வார காலமாக தயாரிப்புகளை செய்து வந்த மக்கள் திட்டமிட்டவகையில் நள்ளிரவில் குடியேறினர். கட்டுக்கோப்புடன் முன்னணி தோழர்களின் தலைமையில் பொதுமக்கள் அணிவகுத்துச் சென்றனர். கிட்டத்தட்ட 90 வீடுகளை திட்டமிட்ட நேரத்திற்குள் கட்டிமுடித்து விட்டனர். தகவலறிந்து 31/10/2026 பாபநாசம் வட்டாட்சியர், காவல்துறையினர் வந்து மக்கள் வீடு கட்டியதை எதிர்த்து கடுமையான வாக்குவாதம் செய்தனர். நாமும் கோரிக்கை நிறைவேறாமல் போராட்டத்திலிருந்து விலகமாட்டோமென உறுதியாக கூறிவிட்டோம். போராட்டம் தொடர்கிறது.

மக்கள் குடியேறியிருக்கும் நத்தம் புறம்போக்கு நிலத்தை வசதி படைத்த மூன்று பிராமணர்கள் சேர்ந்து, அதிகாரி(யும் பிராமணர்) உடந்தையுடன், போலி ஆவணங்களைத் தயாரித்து வகை மாற்றம் செய்து அடையாளம் தெரியாத 50 நபர்கள் பெயரில் பட்டா வாங்கி, பின்னர் தங்கள் பெயருக்கே அவற்றை மாற்றிக் கொண்டனர். மேலும் 2017ல், அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு, இந்த 1.5 ஏக்கர் நிலத்தை விற்பனை செய்திருக்கிறார்கள்.

எனவே, தகுதியற்ற நபர்களுக்கு பொதுச் சொத்தை அபகரித்து பயன்படுத்தும்போது அதிகாரிகளிடம் முறையாக வீட்டுமனை கேட்டு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் பொதுமக்கள் மீது மாவட்ட நிர்வாகம் பழிசுமத்துகிறது. ஒடுக்குமுறை ஏவத் தயாராகி வருகிறது.

இதைப் பற்றியெல்லாம் அஞ்சாமல் குடியேறிய மக்கள் குடும்பம் குடும்பமாக குழந்தைகளோடு அங்கேயே சமைத்து சாப்பிட்டு தமக்கான சொந்த இடம் கிடைத்த மகிழ்ச்சியில் உற்சாகமாக உள்ளனர். இதற்கிடையில் கோட்டாட்சியர் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். குடியேறிய மக்கள் சார்பில் 15 பேர் பிரபு தலைமையில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். மாவட்டச் செயலாளர் மாசிலாமணி, அவிகிதொச மாநிலச் செயலாளர் ஜெசிந்தா, பிரேமா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும் என கோட்டாட்சியர் வலியுறுத்த, பேச்சு வார்த்தையில் பிரதிநிதிகள் முடியாது என திட்டவட்டமாக கூறிவிட்டனர். வீட்டு மனை இல்லாதவர்களின் பட்டியலை மீண்டும் ஒருமுறை கொடுங்கள் என கோட்டாட்சியர் கூறியுள்ளார். கேட்டவாறு புதிய மனுக்கள் 2ம்தேதி கோட்டாட்சியரிடம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தையின் விளைவாக, ஆக்கிரமிப்பாளர் கட்டியுள்ள வீடுகளில் 'சட்டவிரோத கட்டிடங்களை 4 வாரங்களுக்குள் அப்புறப்படுத்த வேண்டுமென கோட்டாட்சியர் அறிவிப்புச் செய்துள்ளார்.

இந்த வட்டாரத்தில் வீட்டுமனை, வீடு கோரி கடந்த 4 ஆண்டாக போராட்டம் நடந்து வருகிறது. இந்த குடியேறும் போராட்டம் அனைவரையும் உற்சாகப்படுத்தியிருக்கிறது போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

மாவட்டச் செயலாளர் மாசிலாமணி, மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் போராட்டத்துடன் நெருக்கமாய் இருந்து வழிகாட்டி வருகின்றனர். மாவட்டக் கட்சி, அவிகிதொச, பெண்கள் கழகம் உள்ளிட்ட அமைப்புகளை முழுமையாக ஈடுபடுத்தும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. 02–11–'26 அன்று கட்சி மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி குடியேறிய மக்களைச் சந்தித்து பாராட்டு தெரிவித்தார்.

தோழர் ஸ்வதேஷுக்கு அஞ்சலி!

இகக(மாலெ) விடுதலை கட்சியின் மிக முக்கியமான



மூத்த தலைவர் தோழர் ஸ்வதேஷ் அவர்கள் மரணமுற்ற செய்தி வந்தடைந்ததை அடுத்து, இரவோடு இரவாக குடியேறிய அந்த இடத்திலேயே அக். 31 அன்று காலை தோழர் ஸ்வதேஷ் அவர்களுக்கு அஞ்சலி கூட்டம் நடத்தப்பட்டது. திரளான மக்கள் கூடியிருக்க, தோழரது உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி மவுனம் கடைப்பிடிக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் மாசிலாமணி, மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் பிரபு, கண்ணய்யன், ஜெயிந்தா, தவச்செல்வம், புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் ரங்கசாமி, வளத்தான், ரேவதி, மணிமேகலை, ஜோதிவேல், ராஜலட்சுமி, சிவராஜ் மற்றும் தஞ்சை மாவட்டக்கமிட்டி, பாபநாசம் ஒன்றியக் கமிட்டி தோழர்கள் மலரஞ்சலி செலுத்தினர். கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் தோழர் ஸ்வதேஷுக்கு புகழஞ்சலி செலுத்தியும் குடியேறிய மக்களின் போராட்டத்தைப் பாராட்டியும் பேசினார்.

கடைசி செய்தி: குடியேறிய 5வது நாள், 04–11–'26, காலை 10 மணி அளவில் சுமார் 300 காவலர்கள், ஏராளமான வாகனங்கள் புடைசூழ வட்டாட்சியர், டிஎஸ்பி குடியேறிய இடத்திற்கு வந்தனர். அப்புறப்படுத்த வலியுறுத்தினர். மக்கள் மறுத்துவிட்டனர். உள்ளே நுழைந்து குடிசைகளை பிரித்து எறிவோம் என எச்சரித்தனர். தலைவர்களும் மக்களும் குறிப்பாக பெண்கள் கம்பிக் கதவுக்கு உள்ளே போலீசை நுழைய விடமால் தடுத்து நிறுத்திக்கொண்டே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். நமது வேண்டுகோள்படி, டிசம்பர் 9 ம் தேதிக்குள் தகுதி உள்ளவர்களுக்கு வீட்டுமனை வழங்கப்படும் என ஒலிபெருக்கியில் வட்டாட்சியர் அறிவித்தார். அதனடிப்படையில் இன்று மாலைக்குள் குடிசைகளை திரும்ப எடுத்துக் கொள்வதென உடன்பாடு ஏற்பட்டது. மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் தோழர் சண்முகம் மாவட்ட ஆட்சியருடன் பேசியுள்ளார். சமூகநீதித்துறை அமைச்சரை தலைமையகத்தின் சார்பாக தோழர் ஆசைத்தம்பி தலைமையில் சந்தித்து கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர். மூன்று மணி நேரம் நீடித்த தள்ளு முள்ளு பிற்பகல் ஒருமணிக்கு முடிவுக்கு வந்தது.❑

நெல்லையில் உழைப்போர் உரிமை இயக்கம்– எல்டியுசி–ஏஐசிசிடியு
தூய்மைப் பணியாளர்கள் காத்திருப்புப் போராட்டம்

திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு அரசாணை 62ன் படி நாள் ஒன்றுக்கு ரூ. 703/-. வழங்கவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அறிவித்த நாள் சம்பளம் ரூ. 567/- ஐ 1.4.2026 முதல் நிலுவைவத் தொகையுடன் உடனடியாக வழங்கிடவும் தூய்மைப் பணியாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பல கோடி ரூபாயை வருங்கால வைப்பு நிதியில் (EPF)உடனடியாக செலுத்திடவும் தீபாவளி போனஸ் உடனடியாக வழங்கிடவும் தூய்மைப் பணியில் போலியாக உருவாக்கப்பட்டுள்ள ஒப்பந்த முறையை ரத்துசெய்யவும் அனைவரையும் பணி நிரந்தரம் செய்யக் கோரி தூய்மைப் பணியாளர் நெல்லை மாநகராட்சியில் 26.10.2026 அன்று நடைபெற்றது. உழைப்போர் உரிமை இயக்க நெல்லை மாவட்டப் பொறுப்பாளர் சுந்தர்ராஜ். ஏஐசிசிடியு மாநில துணைத் தலைவர் ஜி.ரமேஷ் போராட்டத்தை வழிநடத்தினர். ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் டி.சங்கரபாண்டியன். நெல்லை மாவட்டச் செயலாளர் கா.கணேசன் வாழ்த்திப் பேசினர். தோழர்கள் இசக்கிமுத்து. சிவராமன். ராதாகிருஷ்ணன். மாரியம்மாள் உட்பட 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் அறிவித்த சம்பளத்தை நிலுவையுடன் 5.11.2026 அன்றும் தீபாவளி போனஸ் 6.11.2026 அன்று வழங்கிட ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து இரவு 9 மணியளவில் போராட்டம் முடிவுக்கு வந்தது.



பிரேசிலில் லூலாவின் வெற்றி லத்தீன் அமெரிக்காவில் டிரம்ப்பின் ஏகாதிபத்தியத் திட்டங்களுக்குப் பலத்த அடி

பிரேசிலில் அக்டோபர் 25 அன்று நடந்த அதிபர் தேர்தலின் இரண்டாம் சுற்றில், முன்னாள் அதிபர் ஜாயர் பொல்சோனாரோவின் மகனும் தீவிர வலதுசாரி போட்டியாளருமான ஃபிளாவியோ பொல்சோனாரோவைத் தோற்கடித்து வெற்றி பெற்றதற்கு பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, தொழிலாளர் கட்சி (பார்டிடோ டோஸ் டிரபல்ஹடோரஸ், பிடி) மற்றும் பிரேசில் மக்களுக்கு சிபிஐ(எம்எல்) விடுதலை தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த வெற்றி தீவிர வலதுசாரிக்கும் லத்தீன் அமெரிக்காவில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் ஏகாதிபத்திய திட்டங்களுக்கும் முக்கியமான பின்னடைவாகும்.

பிரேசிலின் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களில் லூலாவின் அரசியல் பயணம் வேரூன்றியுள்ளது. பெர்னம்புகோ-வில் விவசாயத் தொழிலாளர்களின் ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவர், சிறுவயதிலேயே சாவோ பாவுலோவுக்குக் குடிபெயர்ந்து, உலோகத் தொழிலாளராகப் பணியாற்றி, பின்னர் தொழிற்சங்கத் தலைவராக உருவெடுத்தார். 1970-களின் இறுதியில் பிரேசிலின் இராணுவச் சர்வாதிகாரத்திற்கு எதிரான பெரும் தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் மூலம் அவர் முக்கியத்துவம் பெற்றார். 1980-இல் தொழிலாளர் கட்சியை நிறுவியவர்களில் ஒருவராகவும் அவர் இருந்தார். 2002-இல் முதன்முதலில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2006-இல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட லூலா, 2022 தேர்தலில் வெற்றி பெற்று 2023-இல் மீண்டும் அதிபர் பதவிக்குத் திரும்பினார். 2026 இரண்டாம் சுற்றில் அவர் பெற்ற வெற்றி, அவரது நான்காவது அதிபர் தேர்தல் வெற்றியைக் குறிக்கிறது; தொழிற்சாலைத் தளத்திலிருந்து அதிபர் பதவி வரையிலான அவரது அசாதாரண அரசியல் பயணத்தையும் குறிக்கிறது; ஜனநாயகத்திற்கும் சமூகநீதிக்குமான பிரேசிலின் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களால் வடிவமைக்கப்பட்டதாக இந்தப் பயணம் அமைந்துள்ளது.

லத்தீன் அமெரிக்காவை அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து, அந்தப் பிராந்தியத்தை வாஷிங்டனின் பின்கொல்லைப் பகுதியாக மாற்றும் டிரம்ப்பின் ஏகாதிபத்திய திட்டங்களுக்கு லூலாவின் வெற்றி குறிப்பிடத்தக்க பின்னடைவாகும். "டான்ரோ கோட்பாடு" என்று அழைக்கப்படுவதன் மூலம், டிரம்ப் நிர்வாகம் அமெரிக்க கண்டம் முழுவதையும் அமெரிக்க செல்வாக்குப் பகுதியாக ஒருங்கிணைக்க முயல்கிறது; இராணுவத் தலையீடு, பொருளாதார நெருக்கடி, அரசியல் அழுத்தம் மூலம் சுதந்திர செயல்பாடுகளை முன்னெடுக்கும் அரசாங்கங்களை அடிபணிய வைக்க முயல்கிறது. வெனிசுவேலாவில் அமெரிக்கப் படையெடுப்பும் கியூபாவுக்கு எதிரான அதிகரிக்கும் அச்சுறுத்தல்களும் இந்த நிகழ்ச்சி நிரலின் மூர்க்கத்தனமான தன்மையை வெளிப்படுத்துகின்றன. இந்தப் பிராந்திய அதிகார விளையாட்டில் பிரேசில் ஒரு முக்கியமான பரிசாக இருந்தது; பொல்சோனாரோ முகாம் அமெரிக்க ஆதிக்கம் செலுத்தும் அரைக்கோளத்திற்கான டிரம்ப்பின் தொலைநோக்குடன் இணைந்திருந்தது. தனது வெற்றிப் பேரணியில் லூலா வலுவாகத் தெரிவித்த எதிர்ப்புணர்வு இதை எதிரொலித்தது: "நாங்கள் யாருடைய பின்கொல்லைப் பகுதியும் அல்ல!"

ஜாயர் பொல்சோனாரோ மீதான வழக்கு நடைபெற்று வரும் நிலையில் பிரேசில் மீது விதிக்கப்பட்ட தண்டனைச் சுங்க வரிகள் உட்பட, பொல்சோனாரோ முகாமுக்கு டிரம்ப் அளித்த ஆதரவு, நாட்டின் அரசியல் திசையைப் பாதிக்க பொருளாதார அழுத்தத்தைப் பயன்படுத்தியதை வெளிப்படுத்தியது. அமெரிக்க ஏகாதிபத்தியம், பெரு நிறுவனங்களின் அதிகாரத்தையும் சமூக ஊடகக் கையாளுதலையும் பயன்படுத்தி பிரேசிலின் தேர்தல் செயல்முறையைப் பாதித்து, பொல்சோனாரோவின் தீவிர வலதுசாரி முகாமுக்கு ஆதரவாக ஆட்டத்தளத்தைச் சாய்த்தது. அமெரிக்காவின், உலகளாவிய தீவிர வலதுசாரியின் முக்கிய நிதியளிப்பவரும் எக்ஸ்-இன் உரிமையாளருமான எலான் மஸ்க், தீவிர வலதுசாரி சக்திகள் டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்தி பொதுக் கருத்தை வடிவமைக்கும் அரசியல் சூழலை முன்னெடுக்க உதவியுள்ளார்.

ஃபிளாவியோ பொல்சோனாரோவை ஆட்சிக்குக் கொண்டுவரும் முயற்சி, உழைக்கும் மக்களின் அறுதியிடலுக்கும் பிரேசிலின் ஜனநாயக, தேசிய இறையாண்மையைப் பாதுகாக்கும் சக்திகளுக்கும் எதிரான பரந்த வலதுசாரித் தாக்குதலின் ஒரு பகுதியாகும். இருப்பினும், இந்தக் கடுமையான சவால்கள் மற்றும் முதல் சுற்றில் பின்தங்கியிருந்த நிலையிலும் லூலா தனது ஆதரவை ஒருங்கிணைத்து இரண்டாம் சுற்றில் வெற்றியை உறுதி செய்தார்; இது வெகுமக்களின் மீண்டெழும் திறனையும் மூர்க்கத்தனமான தீவிர வலதுசாரித் தாக்குதலுக்கு எதிராக எதிர்த்து நிற்கும் சக்திகளின் கூட்டு வலிமையையும் வெளிப்படுத்துகிறது.

பாலஸ்தீனப் போராட்டத்துடன் பிரேசில் மக்களின் ஒருமைப்பாட்டையும் காசா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைப் போருக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதையும் லூலாவின் வெற்றி மீண்டும் உறுதிப்படுத்துகிறது. டிரம்ப்-நெதன்யாகு குற்ற அச்சு, லத்தீன் அமெரிக்க நாடுகளைத் தனது நிகழ்ச்சி நிரலுக்கு அடிபணிய வைக்கவும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் குற்றங்களுக்கான எதிர்ப்பை மௌனமாக்கவும் முயன்ற வேளையில், பிரேசில் பாலஸ்தீன உரிமைகளுக்கு ஆதரவாக உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தது. காசா மீதான இனப்படுகொலைப் போர், பாலஸ்தீன மக்களுக்கு எதிரான குற்றங்களுக்காக இஸ்ரேலை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதில் தென்னாப்பிரிக்காவுடன் நின்ற தெற்குலக நாடுகளில் பிரேசிலும் ஒன்றாகும்.

தீவிர வலதுசாரிக்கும் ஏகாதிபத்திய அச்சுறுத்தல்களுக்கும் எதிராக நின்ற பிரேசில் மக்கள், தொழிலாளர் கட்சி, அனைத்து முற்போக்கு, ஜனநாயக, தொழிலாளர் வர்க்க சக்திகளுக்கு சிபிஐ(எம்எல்) விடுதலை தனது புரட்சிகர ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.❑

வலதுசாரி பாசிசத்தின் எழுச்சியும் கேரளத்தின் முன்னுள்ள சவால்களும்





கேஎம். என். விஜயன் கலாச்சார மையம் கோழிக்கோட்டில் அக்டோபர் 31, 2026, மாலை 4 மணிக்கு ஏற்பாடு செய்த விஜயன் மாஷ் நினைவு கருத்தரங்கத்தில், சிபிஐஎம்எல் லிபரேசன் பொதுசெயலாளர் திபங்கர் 'இந்திய பாசிசத்தின் எழுச்சியும், இந்தியா மற்றும் கேரளத்தின் முன்னுள்ள சவால்களும்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில், 'பாசிச மோடி ஆட்சியின் அடக்குமுறைகளும் ஆட்சிக்கு எதிரான சமீபத்திய ஜென்சி – இளைஞர் எழுச்சி' பற்றி கூறி கவனத்தை ஈர்த்தார். 'மே. வங்கத்தில் சிபிஎம் ஆட்சி இழப்பையும் பிஜெபி ஆட்சிக்கு வந்த விதத்தையும் மறந்துவிடக் கூடாது. பாசிசம் கேரளாவை கைப்பற்றிவிட முடியாது என அலட்சியமாக இருந்துவிடக் கூடாது, எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.' என்பதை வலியுறுத்தினார். நிகழ்ச்சியில் தோழர்கள் கே. பிரகாஷ் பாபு, சி.எல்.சந்தோஷ் (ஆர்எம்பிஐ தலைவர்), பி.கே. சோமநாத், கே. பி. உமேஷ்பாபு, என். பி. பீதாம்பரன் ஆகியோர் உரையாற்றினர்.

சென்னை ஜந்தர்மந்தர் 2.0

வாக்குத் திருடர் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, சென்னையில் காவல்துறையின் தடையை மீறி 24 மணி நேர தொடர் போராட்டத்தை இடதுசாரி கட்சிகளின் இளைஞர், மாணவர் அமைப்புகளான DYFI, AIYF, RYA, SFI, AISF, AISA, AIDSO மற்றும் -CJP உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. நாங்களும் இந்தியா கூட்டணியில் இருக்கிறோம். எஸ்ஐஆர்-ஐ எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்ட தவெக அரசு போராட்டத்திற்கு அனுமதி இல்லை என்று சொல்லி,போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவிடாமல் அனைவரையும் கைது செய்து மண்டபத்தில் அடைத்தது. மறுநாள் காலை மண்டபத்திலிருந்து வந்த மாணவர் மற்றும் இளைஞர்கள் மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இந்த போராட்டத்தில் புரட்சிகர இளைஞர் கழகத்தின் நிர்வாகிகள் தனவேல், பெரோஸ்பாபு, அகில இந்திய மாணவர் கழகத்தின் கோகுல் மற்றும் ஜனநாயக சட்ட மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். மாணவர் இளைஞர் மத்தியில், அகில இந்திய மாணவர் கழகத்தின் மேனாள் தேசியச் செயலாளரும் ஏஐசிசிடியு மாநிலத் தலைவருமான கு.பாரதி வாழ்த்திப் பேசினார்.



அவிகிதொச 7வது மாநில மாநாடு





















MALAE THEEPORI. PRGI No. TNTAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17

தோழர் சம்புஜிக்கு செவ்வஞ்சலி!













Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**